




# தினபூமி

thinaboomi.com











**ஆரஞ்சு நிறத்தில் செவ்வாய் கிரகம் போல் காட்சியளித்த ஏதென்ஸ் நகரம்: விளக்கம் அளித்த நாசா நிறுவனம்**

...2-ம் பக்கம்

**புலிவெந்துலா தொகுதியில் வேட்புமனுவை தாக்கல் செய்தார் ஆந்திர முதல்வர் ஜெகன் மோகன்**

...3-ம் பக்கம்

**ரஞ்சிக் கோப்பை வீரர்களுக்கு ரூ.1 கோடி வரை சம்பளத்தை உயர்த்த பி.சி.சி.ஐ. பரிசீலனை**

...7-ம் பக்கம்

# மதுரையில் விடிய விடிய நடந்த கள்ளழகரின் தசாவதார நிகழ்ச்சி

## இன்று பூப்பல்லக்கில் எழுந்தருளி அருள்பாலிக்கிறார்

மதுரை, ஏப். 26-

மதுரை சித்திரை திருவிழாவையொட்டி கள்ளழகரின் தசாவதார நிகழ்ச்சி விடிய விடிய ராமராயர் மண்டபத்தில் நடந்தது. அதை தொடர்ந்து ராமநாதபுரம் மன்னர் சேதுபதி மண்டபத்தில் திருமஞ்சனமாகி, இன்று அதிகாலை 2.30 மணிக்கு கள்ளர் கோலத்தில் பூப்பல்லக்கில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்புரிகிறார்.

மதுரையில் சித்திரை திருவிழாவையொட்டி கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் கடந்த 23-ம் தேதி நடந்தது. அதை தொடர்ந்து நேற்று முன்தினம் மண்டூக முனிவருக்கு சாப விமோசனம் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

அதை தொடர்ந்து மேள, தாளம் முழங்க மதுரை ஆழ்வார்புரத்தில் உள்ள ராமராயர் மண்டபத்துக்கு கள்ளழகர் கிளம்பினார். நேற்று முன்தினம் நள்ளிரவில் அங்கு தசாவதார நிகழ்ச்சி தொடங்கியது. விடிய, விடிய நடந்த இந்த நிகழ்ச்சியில் முத்தங்கி சேவை, மச்ச அவதாரம், கூர்ம அவதாரம், வாமன அவதாரம், ராம அவதாரம், கிருஷ்ண அவதாரம், மோகினி அவதாரம் உள்ளிட்ட அவதாரங்களில் அழகர் காட்சி தந்தார்.

அழகரை ஏராளமான பக்தர்கள் தரிசித்தனர். நேற்று அதிகாலை 6 மணி அளவில் மோகினி அவதாரத்தில் கள்ளழகர் வீதி உலா வந்தார். அதை தொடர்ந்து பகல் 2 மணி அளவில் ராமராயர் மண்டபத்தில் ஆனந்தராயர் பல்லக்கில் ராஜாங்க கோலத்தில் எழுந்தருளிய கள்ளழகர் இரவு 11 மணி அளவில் தல்லாகுளத்தில் உள்ள ராமநாதபுரம் மன்னர் சேதுபதி மண்டபத்தில் திருமஞ்சனமாகி, இன்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை 2.30 மணிக்கு கள்ளர் கோலத்தில் பூப்பல்லக்கில் எழுந்தருளி அருள்புரிகிறார்.

அதே கோலத்துடன் கருப்பணசாமி கோவில் சன்னதியில் வையாழி ஆனவுடன் அங்கிருந்து அழகர் மலை நோக்கி புறப்படுகிறார். மூன்றுமாவடி, அப்பன் திருப்பதி, கள்ளந்திரி வழியாக 27-ம் தேதி (சனிக்கிழமை) காலை 10.32 மணி அளவில் தனது இருப்பிடம் சென்று அடைகிறார்.

### பாராளுமன்ற தேர்தல்: கேரளா உள்ளிட்ட

# 13 மாநிலங்களில் இன்று 2-ம் கட்ட வாக்குப்பதிவு

## வயநாடு உள்ளிட்ட 89 தொகுதிகளில் நடைபெறுகிறது

புதுடெல்லி, ஏப். 26-

கேரளா உள்ளிட்ட 13 மாநிலங்களில் பாராளுமன்ற தேர்தலுக்கான 2-ம் கட்ட வாக்குப்பதிவு இன்று நடைபெறுகிறது. இதில் ராகுல் காந்தி போட்டியிடும் வயநாடு உள்ளிட்ட 89 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

**2-ம் கட்டவாக்குப்பதிவு**

7 கட்டமாக நடைபெறும் பாராளுமன்ற மக்களவைத் தேர்தலின் முதல் கட்ட வாக்குப்பதிவு, கடந்த 19 ஆம் தேதி நடைபெற்றது. முதல் கட்டத்தில் தமிழ்நாட்டின் 39 தொகுதிகள் உள்பட 102 தொகுதிகளில் தேர்தல் நடைபெற்றது.

இதனை தொடர்ந்து, நாடு முழுவதும் 13 மாநிலங்களில் உள்ள 89 தொகுதிகளுக்கு இன்று வாக்குப்பதிவு நடைபெறுகிறது. இவற்றில் மணிப்பூர், ராஜஸ்தான், திரிபுரா மாநிலங்களில் இது இரண்டாம் மற்றும் கடைசிகட்ட வாக்குப்பதிவு என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, கடந்த ஏப்ரல் 19-ஆம் தேதி 102 தொகுதிகளுக்கு நடந்த முதல் கட்டத் தேர்தலில் 65.5 சதவீத வாக்குகள் பதிவாகியிருந்தது. இந்நிலையில், இன்று 2-ம் கட்டத் தேர்தல் நடைபெறுகிறது.

**எந்தெந்த மாநிலங்களில்**

1) அசாம்: 5 மக்களவைத் தொகுதிகள் (மொத்தம் 14), 2) பிகார்: 5 (மொத்தம் 40), 3) சத்தீஸ்கர்: 3 (மொத்தம் 11), 4) கர்நாடகா: 14 (மொத்தம் 28), 5) கேரளா: 20 (மொத்தம் 20), 6) மத்தியப் பிரதேசம்: 7 (மொத்தம் 29), 7) மகாராஷ்டிரா: 8 (மொத்தம் 48), 8) மணிப்பூர்: 1, 9) ராஜஸ்தான்: 13 (மொத்தம் 25), 10) திரிபுரா: 1 (மொத்தம் 2), 11) உத்தரப் பிரதேசம்: 8 (மொத்தம் 80), 12) மேற்கு வங்கம்: 3 (மொத்தம் 42), 13) ஜம்மு காஷ்மீர்: 1 (மொத்தம் 5).

**முக்கிய வேட்பாளர்கள்**

இன்று நடக்கும் இரண்டாம் கட்ட தேர்தலில் பல முக்கிய வேட்பாளர்கள் களம் காண்கின்றனர். குறிப்பாக கேரள மாநிலம் வயநாட்டில் ராகுல் காந்தி போட்டியிடுகிறார்.

அவரை எதிர்த்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆனி ராஜாவையும், பாஜக மாநிலத் தலைவர் கே. சுரேந்திராவையும் களம் இறக்கியுள்ளது. காங்கிரஸ் எம்.பி. சசி தரூர் திருவனந்தபுரம் தொகுதியில் பாஜகவின் ராஜீவ் சந்திரசேகரை எதிர்கொள்கிறார். இவர்களைத் தவிர மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா, ஹேமமாலினி, கஜேந்திர சிங் ஷெகாவத் ஆகியோரும் களத்தில் உள்ளனர்.

**கேரளாவில்...**

கேரளாவில் 20 மக்களவைத் தொகுதிகளுக்கு ஒரே கட்டமாக இன்று வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

அந்த மாநிலத்தில் ஆளும் மார்க்சிஸ்ட் தலைமையிலான இடது ஜனநாயக முன்னணி, காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி, பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி இடையே மும்முனைப் போட்டி நிலவுகிறது.

வயநாடு மக்களவைத் தொகுதியில் முஸ்லிம்கள் 45 சதவீதம், இந்துக்கள் 41 சதவீதம், கிறிஸ்தவர்கள் 13 சதவீதம் பேர் உள்ளனர்.

கடந்த 2019-ம் ஆண்டு மக்களவைத் தேர்தலின்போது வயநாடு தொகுதியில் 65 சதவீத வாக்குகளுடன் ராகுல் காந்தி அமோக வெற்றி பெற்றார். வயநாட்டை காங்கிரஸ் மீண்டும் கைப்பற்றுவாரா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. காங்கிரஸ் எம்.பி. சசி தரூர் திருவனந்தபுரம் தொகுதியில் பாஜகவின் ராஜீவ் சந்திரசேகரை எதிர்கொள்கிறார்.

**உத்தரப் பிரதேசம்...**

உத்தரப் பிரதேசத்தில் உள்ள 80 தொகுதிகளில் இன்று 8 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெறுகிறது. அம்ரோஹா, மீரட், பாக்பத், காசியாபாத், கவுதம் புத்தா நகர், புலந்த்சாஹர், அலிகர் மற்றும் மதுரா தொகுதிகளில் வாக்குப்பதிவுக்கான முழு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவிட்டன. 8 தொகுதிகளில் மொத்தம் 91 வேட்பாளர்கள் களம் காண்கின்றனர். உ.பி.யின் மதுரா தொகுதியில் 3வது முறையாக தொடர் வெற்றியை எதிர் நோக்கி களமிறங்குகிறார் ஹேமா மாலினி, மீரட்டில் ராமாயண சீரியலில் ராமராக நடித்த அருண் கோவில் களம் காண்கிறார். மீரட்

(கடைசி பக்கம் பார்க்க)

### 2-ம்கட்ட வாக்குப்பதிவு:

# இறுதிக்கட்ட பணிகளில் தேர்தல் ஆணையம் தீவிரம்

புதுடெல்லி, ஏப். 26-

இன்று 2-ம்கட்ட வாக்குப்பதிவை முன்னிட்டு இறுதிக்கட்ட பணிகளை தேர்தல் ஆணையம் தீவிரப்படுத்தியுள்ளது.

பாராளுமன்ற மக்களவைத் தேர்தலில் இரண்டாம் கட்டமாக கேரளம் உள்ளிட்ட 13 மாநிலங்கள் மற்றும் ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் அடங்கிய 89 தொகுதிகளில் வெள்ளிக்கிழமை (ஏப். 26) வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது. கேரளத்தில் மொத்தமுள்ள 20 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறுகிறது. மணிப்பூர் மாநிலத்தில் வெளி மணிப்பூர் தொகுதியின் சில பகுதிகளுக்கு ஏப்ரல் 19-ஆம் தேதி தேர்தல் நடைபெற்ற நிலையில், மற்ற பகுதிகளுக்கு இன்று வாக்குப் பதிவு நடத்தப்படவுள்ளது.

இந்நிலையில் 2-ம் கட்ட தேர்தலை முன்னிட்டு அந்தந்த மாவட்டங்களில் இருந்து வாக்குப்பதிவு இயந்திரங்கள், விவிபேட் மற்றும் மூலப் பொருள்களை பிரித்து அனுப்பும் பணிகளில் தேர்தல் ஆணைய அதிகாரிகள் முனைப்பு காட்டி வருகின்றனர்.

வாகனங்கள் செல்ல முடியாத வடகிழக்கு பகுதிகளுக்கும் பிற இடங்களுக்கும் ஹெலிகாப்டர் மூலம் வாக்குப்பதிவுக்கு தேவையான பொருள்கள் கொண்டு செல்லப்படுகிறது.

இன்று 2-ம் கட்ட தேர்தல் நடைபெறவுள்ள மாநிலங்களில் புதன்கிழமையுடன் பிரசாரம் நிறைவடைந்து காவல்துறையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

### தேர்தல் விதிமீறல் புகார்:

# பிரதமர் மோடி, ராகுல் காந்தி விளக்கமளிக்க வேண்டும்

## பா.ஜ.க., காங்கிரசுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவு





புதுடெல்லி, ஏப். 26-

தேர்தல் விதிமுறைகளை மீறிய புகாரில் பிரதமர் மோடி, ராகுல் காந்தி ஆகியோர் விளக்கமளிக்க வேண்டும் என தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. ஏப்ரல் 29-ம் தேதி காலை 11 மணிக்குள் விளக்கம் அளிக்க வேண்டும் என்று பா.ஜ.க., காங்கிரஸ் கட்சிகளுக்கு தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

**காங்கிரஸ் புகார்...**

பிரதமர் மோடி ராஜஸ்தானில் பேசியது தொடர்பாக அளிக்கப்பட்ட காங்கிரஸ் கட்சிகளின் புகார் குறித்து தேர்தல் ஆணையம் ஆய்வு செய்து வருவதாக தகவல்கள் வெளியான நிலையில் விளக்கம் கேட்டு தற்போது உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பிரதமர் மோடியின் பேச்சு தொடர்பாக தேர்தல் ஆணையத்திடம் காங்கிரஸ் கட்சி அளித்த புகாரில், பிரதமரின் பேச்சு பிரிவினையை தூண்டுவதாக, தவறானதாக, ஒரு குறிப்பிட்ட சமூகத்தை மட்டுமே குறிவைப்பதாக இருப்பதாகக் கூறியிருந்தது.

**பொறுப்பை ஏற்க...**

இந்த நிலையில்தான் இந்த புகாரின் அடிப்படையில் பிரதமர் மோடி விளக்கமளிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இதேபோன்று தேர்தல் விதிமுறைகளை மீறிய புகார் ராகுல் காந்தி விளக்கமளிக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. தேர்தல் ஆணையம் தனது உத்தரவில், “வேட்பாளர்கள், குறிப்பாக நட்சத்திர பேச்சாளர்களின் பிரச்சார நடத்தைக்கு அரசியல் கட்சிகள்தான் முதன்மை பொறுப்பை ஏற்க வேண்டும். உயர் பதவிகளில் இருப்பவர்களின் பிரச்சார உரைகள் மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. தேர்தல் விதி மீறல் புகார் தொடர்பாக உரிய விளக்கம் அளிக்க வேண்டும்” என்று குறிப்பிட்டுள்ளது.

**கார்கே - ஜே.பி.நட்டா....**

முதல்கட்டமாக பாஜகவின் புகார் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவுக்கும், காங்கிரஸின் புகார் பாஜக தலைவர் ஜே.பி நட்டாவுக்கும் உத்தரவு அனுப்பிவைக்கப்பட்டது. இதனையடுத்து பரஸ்பர புகாரின் மீது தற்போது விளக்கம் கோரப்பட்டுள்ளது என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

**பா.ஜ.க. புகார்...**

நாட்டில் வறுமை அதிகரிப்பு குறித்து ராகுல் காந்தி தவறான கூற்றை கூறி வருகிறார். மேலும், தேர்தல் சூழலை சீர்குலைப்பதற்காக மொழி மற்றும் பிராந்தியத்தின் அடிப்படையில் நாட்டில் வடக்கு-தெற்கு பிரிவினையை ராகுல் காந்தி உருவாக்கி வருகிறார் என்று கடந்த திங்கள் கிழமை பாஜக தேர்தல் ஆணையத்தில் புகார் அளித்தது. இந்தப் புகாரின் அடிப்படையில் தான் தற்போது ராகுல் காந்தியும் விளக்கமளிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

### மணல் முறைகேடு விவகாரம்:

# அமலாக்கத்துறை விசாரணைக்கு 5 மாவட்ட கலெக்டர்கள் ஆஜர்

சென்னை, ஏப் 26-

மணல் கொள்ளை விவகாரத்தில் அமலாக்கத் துறை சம்மன் அனுப்பிய நிலையில் 5 மாவட்ட கலெக்டர்கள் அமலாக்க துறை அலுவலகத்தில் நேற்று நேரில் ஆஜராகி விளக்கம் அளித்தனர்.

தமிழகத்தில் உள்ள முக்கியமான மணல் குவாரிகளில் அரசு நிர்ணயம் செய்த அளவை விட கூடுதலாக மணல் அள்ளி சட்டவிரோதமாக விற்பனை செய்ததாகவும், மணல் ஒப்பந்த குவாரிகளில் கிடைத்த வருமானம் மூலம் சட்டவிரோத பணப் பரிமாற்றங்கள் நடந்ததாகவும் புகார் எழுந்தது.

இதன் அடிப்படையில், கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 12-ம் தேதி தமிழகம் முழுவதும் மொத்தம் 34 இடங்களில் அமலாக்கத் துறையினர் சோதனை நடத்தினர். இதில் பல்வேறு முக்கிய ஆவணங்களை கைப்பற்றினர்.

இதைத் தொடர்ந்து திருச்சி, தஞ்சாவூர், கரூர், அரியலூர் மற்றும் வேலூர் மாவட்ட கலெக்டர்கள், மாநில நீர்வளத் துறையின் மூத்த அதிகாரிகள், ஓய்வு பெற்ற பொதுப்பணித் துறை பொறியாளர்கள் உள்ளிட்ட சிலருக்கு நேரில் ஆஜராக வேண்டும் என அமலாக்கத் துறை சம்மன் அனுப்பியது.

இதை ரத்து செய்யக் கோரி ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. இதை விசாரித்த ஐகோர்ட்டு சம்மனுக்கு தடை விதித்தது. இந்த உத்தரவை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் அமலாக்கத் துறை மேல்முறையீடு செய்தது.

இந்த வழக்கை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு, மாவட்ட கலெக்டர்கள் விசாரணைக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என உத்தரவிட்டது. இந்த நிலையில், 5 மாவட்ட கலெக்டர்களும் விசாரணைக்காக அமலாக்கத் துறை அலுவலகத்தில் நேற்று காலை நேரில் ஆஜராகி விளக்கம் அளித்தனர்.

# தமிழகத்தில் பள்ளிகள் திறப்பு எப்போது? அமைச்சர் அன்பில் மகேஷ் ஆலோசனை


சென்னை, ஏப். 26-

தமிழகத்தில் பள்ளிகள் திறப்பு எப்போது என்பது குறித்தும், வரும் கல்வி ஆண்டில் பள்ளி கல்வித்துறையில் செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் குறித்து அதிகாரிகளுடன், அமைச்சர் அன்பில் மகேஷ் ஆலோசனை நடத்தினார்.

சென்னை பசுமை வழிச்சாலையில் உள்ள முகாம் அலுவலகத்தில், அமைச்சர் அன்பில் மகேஷ் நேற்று அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். இந்த கூட்டத்தில் பள்ளி கல்வித்துறை செயலாளர் குமரகுருபரன், இயக்குநர் அறிவொளி, தொடக்க கல்வி இயக்குநர் கண்ணப்பன், மாதிரி பள்ளிகள் இயக்குநர் சுதன், அரசு தேர்வுகள் துறை இயக்குநர் சேதுராம வர்மன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொது தேர்வு முடிவுகள் வெளியீடு தொடர்பாக ஆலோசனை நடத்தப்பட்டது. மேலும் கோடை வெப்பம் மற்றும் தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட இருப்பதால் விடுமுறை முடிந்து பள்ளிகளை எப்போது திறப்பது என்பது குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. வரும் கல்வியாண்டில் பள்ளி கல்வித்துறை செயல்பாடுகள் மற்றும் மாணவர் சேர்க்கை அதிகரித்தல் குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டது.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| 486.50 | 167.95 |
| பாயிண்ட் 74339.44 | பாயிண்ட் 22570.35 |



**தங்கம்**
1 சவரன் ₹53,680
1 கிராம் ₹6,710



**வெள்ளி**
1 கிலோ ₹86,000
1 கிராம் ₹86.00

**டாலர்** ₹83.35

**பெட்ரோல்** ₹101.57
**டீசல்** ₹93.18



# 11 ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றம்

## ஈராக் பாதுகாப்பு படையினர் தகவல்

**பாக்தாத், ஏப். 26-**

ஈராக்கில் 11 ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக பாதுகாப்பு படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஈராக்கில் ஆதிக்கம் செலுத்திய ஐ.எஸ். அமைப்பை 2017-ம் ஆண்டில் ஈராக் படைகள் தோற்கடித்த பிறகு, நூற்றுக்கணக்கான ஐ.எஸ். ஆதரவாளர்கள் கொல்லப்பட்டனர். பலர் கைது செய்யப்பட்டனர். இன்னும் பலர் ஈராக்கில் அல்லது வெளிநாட்டில் தலைமறைவாக உள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு தண்டனை வழங்கப்படுகிறது. அவ்வகையில், மரண தண்டனை விதிக்கப்பட்ட ஐ.எஸ். பயங்கரவாதிகள் 11 பேருக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக பாதுகாப்பு படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நசிரியா மத்திய சிறைச்சாலையில் கடந்த 23-ம் தேதி அவர்கள் தூக்கிலிடப்பட்டதாக சிறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். அனைத்து சட்ட நடைமுறைகளையும் நிறைவு செய்தபின், நீதித்துறை அதிகாரிகளின் மேற்பார்வையில் தண்டனை நிறைவேற்றப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈராக்கில் மரண தண்டனை 2003-ம் ஆண்டு ஜூன் 10-ம் தேதி நிறுத்தி வைக்கப்பட்டது. அதன் பின் 2004-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மீண்டும் நடைமுறைக்கு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# செவ்வாய் கிரகம் போல் ஆரஞ்சு நிறத்தில் காட்சியளித்த ஏதென்ஸ்

## நாசா நிறுவனம் விளக்கம்

**ஏதென்ஸ், ஏப். 26-**

ஏதென்ஸ் நகரம் நேற்று முன்தினம் செவ்வாய் கிரகம் போல் ஆரஞ்சு நிறமாக காட்சியளித்தது. இந்த நிலையில் இதற்கான காரணம் குறித்து அமெரிக்காவின் நாசா நிறுவனம் விளக்கம் அளித்துள்ளது.

ஐரோப்பா கண்டத்தின் முக்கிய நாடுகளில் ஒன்றானது கிரீஸ் தலைநகரம் ஏதென்ஸ். பல்வேறு சிறப்புகளுக்கு பெயர்போனதாக விளங்கி வரும் ஏதென்ஸ் நகரம் உலகின் மிகவும் தொன்மையான நகரங்களில் ஒன்றாக கருதப்படுகிறது.

சுமார் 3 ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த கிரேக்க சாம்ராஜ்ஜியத்தின் மையப்புள்ளியாக ஏதென்ஸ் விளங்குகிறது. நவீன ஒலிம்பிக் போட்டிகளின் தாயகமாக விளங்கும் இந்த நாட்டில் பல்வேறு சிறப்புவாய்ந்த நினைவு சின்னங்களும், புராதன கட்டிடங்களும் உள்ளன. பண்டைய காலம் முதலே வெளிநாட்டினரும் சுற்றுலா பயணிகளும் விரும்பி செல்லும் நகரமாக ஏதென்ஸ் விளங்குகிறது. இந்த நிலையில் ஏதென்ஸ் நகரம் நேற்றுமுன்தினம் திடீரென ஆரஞ்சு நிறமாக காட்சியளித்தது. புராதன ஒலிம்பிக் மைதானம் அமைந்துள்ள சின்டக்மா சதுக்கம், பார்த்தியான் ஆலயம், லிகாப்பட்டஸ் குன்றுகளை உள்ளடக்கிய பழைய அகோரா, புதிய அகோரா உள்பட ஏதென்ஸ் நகரமே ஆரஞ்சு நிறமாக மாறி காட்சியளித்தது.

இதனால் சுற்றுலா வந்த வெளிநாட்டினர் மட்டுமின்றி உள்ளூர்வாசிகளும் பீதியடைந்தனர். டூர்கோவூனியா மலை, புனித குன்றுகளை கொண்ட அக்ரோபோலிஸ் ஆகியவையும் செவ்வாய் கிரகத்தை பிரதிபலிப்பதுபோல காட்சியளித்தன.

இந்த நிலையில் ஏதென்ஸ் நகரின் இந்த மாற்றத்துக்கு அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா விளக்கம் கொடுத்துள்ளது. அதாவது, வட ஆப்பிரிக்காவில் இருந்து கிரீஸ், சிப்ரஸ், மாசிடோனியோ உள்ளிட்ட நாடுகளுக்கு இந்த காலத்தில் மேக கூட்டங்கள் நகருவது வாடிக்கைதான்.

இந்த நிலையில் அசாதாரணமாக இந்த மேக கூட்டத்துடன் சாகாரா பாலைவனத்தின் மண்துகள்கள் கலந்ததால் கிரீசை ஆரஞ்சு நிற போர்வை போர்த்தியது போல புழுதி புயல் தாக்கி உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2 நாட்களுக்கு இந்தநிலை நீடிக்கும் என அந்த நாட்டின் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. இந்த நிலையில் ஆரஞ்சு நிறமாக மாறிய ஏதென்ஸ் நகரின் படங்கள் வலை தளங்களில் வைரலாகி வருகின்றன.

# 21-ம் நூற்றாண்டின் அச்சுறுத்தலில் ஒன்றாக பயங்கரவாதம் இருக்கிறது

## ராணுவத்தினர் மத்தியில் அதிபர் புடின் பேச்சு

**மாஸ்கோ, ஏப். 26-**

21-ம் நூற்றாண்டின் அச்சுறுத்தல்களில் ஒன்றாக சர்வதேச பயங்கரவாதம் நீடித்து உள்ளது. இதனை தடுக்கும் வகையில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்று ராணுவத்தினர் மற்றும் அதிகாரிகள் மத்தியில் அதிபர் புடின் உரையாற்றினார்.

பாதுகாப்பு பிரச்சினைகள் தொடர்பான 12-வது சர்வதேச கூட்டம் செயின்ட் பீட்டர்ஸ்பெர்க் நகரில் நடந்தது. இதில் ரஷ்ய அதிபர் புடின் வீடியோ கான்பரன்சிங் மூலமாக கலந்து கொண்டு ராணுவத்தினர், அதிகாரிகள் மத்தியில் உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது,

நிச்சயமாக, 21-ம் நூற்றாண்டின் அச்சுறுத்தல்களில் ஒன்றாக சர்வதேச பயங்கரவாதம் நீடித்து உள்ளது. இதனை தடுக்கும் வகையில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும்.

உலகின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்படும் பயங்கரவாதத் தாக்குதல்களின் நோக்கம், தீவிரவாதக் குழுக்கள் மட்டுமின்றி, சில நாடுகளின் உளவுத் துறையினரும் கூட, அரசியல் சாசன அடித்தளங்களைத் தகர்த்து, இறையாண்மை கொண்ட நாடுகளை சீர்குலைத்து, இனம் மற்றும் மதங்களுக்கு இடையே வெறுப்பைத் தூண்டுகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

# அனைத்து துறைகளிலும் வளர்ச்சி பிரதமர் மோடியால் மட்டும் முடியும்

## மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பேச்சு

**ஐதிராபாத், ஏப். 26-**

'அனைத்து துறைகளிலும் வளர்ச்சியை உறுதி செய்வது பிரதமர் நரேந்திர மோடியால் மட்டுமே முடியும்' என மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா கூறினார்.

தெலுங்கானா மாநிலத்தில் உள்ள மேடக் லோக்சபா தொகுதியில் போட்டியிடும் பா.ஜ., வேட்பாளர் ரகுநந்தன் ராவை ஆதரித்து தேர்தல் பேரணியில், அமித் ஷா பேசியதாவது: சமீபத்தில் தான் தெலுங்கானாவில் காங்கிரஸ் ஆட்சியை பிடித்தது. காங்கிரஸ் கட்சி தெலுங்கானாவை டில்லியின் ஏ.டி.எம்., ஆக்கியுள்ளது. காலேஷ்வரம் திட்டம் அல்லது நில மோசடி தொடர்பாக பாரத் ராஷ்ட்ர சமிதி கட்சிக்கு எதிராக காங்கிரஸ் விசாரணை மேற்கொள்ளவில்லை.

நீங்கள் ஓட்டளித்து, மோடி 3வது முறையாக பிரதமர் ஆகிய பிறகு, ஊழலில் இருந்து தெலுங்கானாவை விடுவிப்பார். தெலுங்கானாவில் ஊழலற்ற ஆட்சியை வழங்குவதும், அனைத்து துறைகளிலும் வளர்ச்சியை உறுதி செய்வதும் பிரதமர் நரேந்திர மோடியால் மட்டுமே முடியும். இந்த முறை தெலுங்கானா மக்கள் பிரதமர் மோடியின் பக்கம் உள்ளனர்.

எல்லா இடங்களிலும் பா.ஜ., வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்ய தெலுங்கானா மக்கள் முடிவு செய்துள்ளனர். ஆட்சிக்கு வந்தால் முஸ்லிம்களுக்கு வழங்கப்படும் 4 சதவீத இடஒதுக்கீட்டை ரத்து செய்வோம். அதனை எஸ்.சி, எஸ்.டி., பி.சி., உள்ளிட்ட பிரிவினருக்கு பகிர்ந்து அளிப்போம். இவ்வாறு அவர் பேசினார்.

# சவுதி மன்னர் அப்துல் அஜீஸ் மருத்துவமனையில் அனுமதி

**ஜெருசலேம், ஏப். 26-**

சவுதி அரேபிய மன்னரான சல்மான் பின் அப்துல் அஜீஸ் (88) மருத்துவமனையில் நேற்று முன்தினம் சேர்க்கப்பட்டார்.

வழக்கமான மருத்துவ பரிசோதனைக்காக ஜெட்டாவில் உள்ள கிங் பைசல் மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் மருத்துவமனையில் அவர் இருப்பார் என்று அந்த நாட்டின் அரசு தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

கடந்த 2015ம் ஆண்டு மன்னராக பதவியேற்ற சல்மான் பின் அஜீஸ் இளவரசர் முகமது பின் சல்மானை பட்டத்து இளவரசராக அறிவித்தார். முகமது பின் சல்மான் தான் அரசு விவகாரங்களை கவனித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அருணாச்சலில் சீன எல்லையை ஒட்டிய நெடுஞ்சாலையில் நிலச்சரிவு

**திபெங், ஏப். 26-**

அருணாச்சல பிரதேச, சீன எல்லையை ஒட்டிய நெடுஞ்சாலையில் பெரும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. திபெங் மாவட்டத்தில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் நெடுஞ்சாலை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அருணாச்சல பிரதேசத்தில் உள்ள திபாங் பள்ளத்தாக்கில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமழை காரணமாக நேற்று முன்தினம் கடும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த நிலச்சரிவில் நெடுஞ்சாலை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அதாவது தேசிய நெடுஞ்சாலை-33 இல் ஹுன்லி மற்றும் அனினி நகரங்களுக்கு இடையேயான பகுதி சேதமடைந்துள்ளது. சாலையை சீரமைக்க மூன்று நாட்கள் ஆகும் என அருணாச்சல பிரதேச மாநில அரசு தெரிவித்துள்ளது.

நிலச்சரிவு காரணமாக சீன எல்லை ஒட்டிய ராணுவ முகாம்களுக்கு செல்லும் சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருக்கிறது. அதோடு, மாநிலத்தின் பல மாவட்டங்களுக்கிடையேயான தகவல் தொடர்பும் துண்டிக்கப்பட்டுள்ளது. தற்போது உணவு மற்றும் பிற அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லை எனக் கூறப்படுகிறது. நிலச்சரிவு தொடர்பான வீடியோக்கள் வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது.

அருணாச்சலப் பிரதேச முதல்வர் பெமா காண்டு, நிலச்சரிவால் ஏற்பட்ட இடையூறுகளை விரைவில் நிவர்த்தி செய்வதாக உறுதியளித்துள்ளார். 2023-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அருணாச்சல பிரதேசத்தில் ஒரு முக்கிய பாலம் உட்பட 28 முக்கியமான திட்டங்களைத் தொடங்கி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் திபாங் பள்ளத்தாக்கை இந்தியாவின் மற்ற பகுதிகளுடன் இணைக்கும் ஒரே சாலை இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

# தெலுங்கானாவில் லாரி மீது கார் மோதிய விபத்தில் 6 பேர் பலி

**ஐதராபாத், ஏப். 26-**

தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தை சேர்ந்த டிரைவர் உள்பட 10 பேர் நேற்று அதிகாலை விஜயவாடாவுக்கு காரில் சென்று கொண்டிருந்தனர். சூர்யாபேட்டை மாவட்டம் கோதாடா அருகே உள்ள ஸ்ரீரங்காபுரம் தேசிய நெடுஞ்சாலையில் கார் சென்று கொண்டிருந்தது.

அப்போது எதிர்பாராதவிதமாக சாலையோரம் நின்ற லாரியின் பின்புறத்தில் கார் பயங்கர வேகத்தில் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் காரில் பயணித்த ஒரு பெண் குழந்தை உள்பட 6 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். மேலும் 4 பேர் காயமடைந்தனர்.

இந்த விபத்து குறித்து போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார் காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

மேலும் இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்ட போலீசார் பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதையடுத்து, இந்த சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்த போலீசார் விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

**26-04-2024**




**மேஷம்:-** பண இழப்பை தவிர்க்க எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய நாள். எதிர்பாராத வகையில் செலவுகள் ஏற்படும். வியாபாரிகளுக்கு தொழிலில் இலாபம் கிட்டுவது அரிது.

**ரிஷபம்:-** புதிய வாகன சுகங்கள் உண்டாகும். சொத்துக்கள் அமையும். விரும்பிய பொருட்கள், விரும்பியபடி கிடைக்கும். கல்வியில் வெற்றி பெற கடின உழைப்பு தேவை.

**மிதுனம்:-** இனிய பயணங்களால் இன்பம் பெருகும். எதிர்பார்த்த இடங்களில் இருந்து தனவரவு கிடைக்கும். பெயரும், புகழும் ஓங்கும். எடுத்த காரியங்கள் யாவற்றிலும் வெற்றி கிடைக்கும்.

**கடகம்:-** குழந்தைகளின் உடல் நிலையில் அக்கறை தேவை. மதிப்பு மரியாதை குறைவு ஏற்படும். அமைதியற்ற வாழ்க்கை அமையும். தடைபட்ட காரியங்கள் கண்டு தன்னம்பிக்கை இழக்காதீர்கள்.

**சிம்மம்:-** தாயின் ஆரோக்கியத்தில் தனிக் கவனம் செலுத்துங்கள். வாகனங்களில் அடிக்கடி பழுது ஏற்படுவதால் பயண சுகம் குறையும். நீர்நிலைகளில் எச்சரிக்கையுடன் இருக்கவும்.

**கன்னி:-** அதிக தனலாபம், புதிய நண்பர்கள், எதிர்பாலர் பால் ஈர்ப்பு மற்றும் இன்பமும் ஏற்றங்களும் ஏற்படும். தொழில் ஆர்வம் கூடுவதால், ஆதாயம் பெருகும். வெற்றியும் கிடைக்கும்.

**துலாம்:-** தேவையற்ற மன சஞ்சலங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. சிலருக்கு வழக்குகளால் வெட்டிச் செலவுகள் ஏற்படலாம். எடுத்த காரியங்களில் தடைகள், தாமதங்கள் ஏற்படும்.

**விருச்சிகம்:-** பல முகாந்திரங்களிலும் பண வரவு கூடும். அரசாங்கத்தால் ஆதாயம் கிடைக்கும். ஆரோக்கியம் மேம்பாடு அடையும், படுக்கை சுகம், நண்பர்கள் சந்திப்பு ஆகியவை ஏற்படும்.

**தனுசு:-** வேலைப்பளு காரணமாக வேளைக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். முன் கோபத்தை அடக்க முன்னேற்றம் ஏற்படும். குறிக்கோளற்ற அலைச்சல்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**மகரம்:-** பலவகைகளிலும் பணம் வந்து குவியும். திருமண ஏற்பாடுகள் நடக்கும். வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டு. நண்பர்கள் சந்திப்பாலும், தெய்வ பக்தியாலும் மன நிம்மதி கூடும்.

**கும்பம்:-** பாக்கிய விருத்தியால் மகிழ்ச்சி நிறைந்த நாளாக அமையும். விரும்பிய பொருட்கள் வீடு வந்து சேரும். அதிகார பதவி கிடைக்கும். வீட்டில் வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும்.

**மீனம்:-** தீர்த்த யாத்திரை செல்லும் பாக்கியம் ஏற்படும். நல்ல காரியங்களில் ஈடுபடுவதால் புகழ் ஓங்கும். அதிகாரப் பதவிகள் கிடைப்பதால் அந்தஸ்தும், மரியாதையும் உயரும்.

### புதுச்சேரியை உலுக்கிய சிறுமி கொலை வழக்கில்

# விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல்: காவல்துறை தகவல்

**புதுச்சேரி, ஏப். 26-**

புதுச்சேரியில் 9 வயது சிறுமி கொல்லப்பட்ட வழக்கில் விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என காவல்துறை தகவல் தெரிவித்துள்ளது.

புதுச்சேரி முத்தியால் பேட்டையை சேர்ந்த 9 வயது சிறுமி மார்ச் மாதம் 2ம் தேதி வீட்டின் அருகே விளையாடி கொண்டிருந்த போது, திடீரென மாயமானர்.

இதனையடுத்து முத்தியால்பேட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து சிறுமியை தேடி வந்த நிலையில், 5 ம் தேதி அதே பகுதியில் உள்ள கழிவு நீர் வாய்க்காலில் இருந்து சிறுமியின் உடலை சடலமாக போலீசார் மீட்டனர். இந்த சம்பவம் நாடு முழுவதும் கடும் அதிர்வலையை ஏற்படுத்தியது.

போலீசாரின் தீவிர விசாரணையில் அதே பகுதியை சேர்ந்த விவேகானந்தன் என்ற முதியவரும், கருணாஸ் என்ற இளைஞரும் சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்தது தெரியவந்தது. இதையடுத்து இருவரும் கைது செய்யப்பட்டு காலாப்பட்டு மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். தொடர்ந்து ஐபிஎஸ் அதிகாரி கலைவாணன் தலைமையில் சிறப்பு குழு அமைக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வந்தது. முதல் கட்ட விசாரணையில் சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டதாக தெரியவந்ததை அடுத்து போக்சோ உள்ளிட்ட 6 பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வந்தது.

இந்நிலையில் சிறுமி உடலை பிரதே பரிசோதனை செய்த ஜிப்மர் மருத்துவமனை அதன் அறிக்கையினை போலீசாருக்கு அளித்தனர். இதையடுத்து, இந்த வழக்கு விசாரணை முடியும் தருவாயில் உள்ள நிலையில், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கான ஆவணங்களை போலீசார் தயாரித்து வருகின்றனர். அதில் சிறுமி பாலியல் வன்கொடுமை செய்து கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளதாக பிரதே பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக போலீசார் தகவல் தெரிவித்துள்ளனர். இன்னும் சில தினங்களில் புதுச்சேரி போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் இந்த வழக்கு தொடர்பான முழுமையான ஆவணங்களுடன் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட உள்ளது.

# பாட்னா ரயில் நிலையம் அருகே பயங்கர தீ விபத்தில் 6 பேர் பலி

**பாட்னா, ஏப். 26-**

பீகார் மாநிலம் பாட்னா ரயில் நிலையம் அருகே உள்ள தங்கம் விடுதி இயங்கி வந்தக் கட்டடத்தில் நேற்று காலை பயங்கர தீ விபத்து நேரிட்டது. இந்த விபத்தில் 6 பேர் பலியாகியுள்ளனர். கட்டடத்தில் தீ பற்றியது குறித்து தகவல் அறிந்ததும் விரைந்து வந்த தீயணைப்புத் துறையினர், கடுமையாக போராடி தீயை அணைத்தனர்.

பாட்னா ரயில் நிலையம் அருகே அமைந்துள்ள தங்கும் விடுதியில் இந்த விபத்து நேரிட்டதாகவும், கட்டடத்துக்குள் இருந்து கிட்டத்தட்ட 20 பேர் பத்திரமாக மீட்கப்பட்ட நிலையில், இதுவரை 6 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது.

தீயணைப்புத் துறை துணை இயக்குநர் இதுபற்றி கூறுகையில், இதுவரை இப்பகுதியில் உள்ள 16 ஆயிரம் விடுதிகளில் ஆய்வு நடத்தி அறிவுறுத்தல்களைக் கொடுத்துள்ளோம். ஆய்வு நடத்த வேண்டிய விடுதிகளின் பட்டியலில் இது உள்ளது. நாங்கள் கொடுக்கும் அறிவுறுத்தல்களை ஒரு சில விடுதிகள் செய்கின்றன.

பல விடுதிகள் செய்வதில்லை. முதற்கட்ட தகவலின்படி, சிலிண்டர் வெடித்ததே இந்த விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

11 மணியளவில் தீ விபத்துக்குறித்து தகவல் கிடைக்கப்பெற்றதாகவும், விசாரணைக்குப் பிறகே உண்மையான காரணம் தெரிய வரும் என்றும் விளக்கம் அளித்துள்ளார்.

# தலமலை, கேர்மாளம் வனப்பகுதியில் 2-வது நாளாக பற்றி எரியும் காட்டுத்தீ

## ஏராளமான மூலிகை மரங்கள் எரிந்து நாசம்

**தாளவாடி, ஏப். 26 -**

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் தலமலை வனச்சரகத்தில் ஏராளமான வனவிலங்குகள் உள்ளன. தற்போது வனப்பகுதியில் கடும் வறட்சி நிலவுவதால் உணவு தண்ணீர் இன்றி விலங்குகள் தவித்து வருகின்றன. வனப்பகுதி முழுவதும் செடி, கொடிகள் காய்ந்து கிடப்பதால் ஆங்காங்கே அடிக்கடி காட்டுத்தீ பற்றி எரிந்து வருகிறது. தீயை வனத்துறையினர் போராடி அனைத்து வருகின்றனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு தாளவாடி வனப்பகுதியில் திடீரென காட்டுத்தீ ஏற்பட்டது. இரண்டு நாட்களாக எரிந்த இந்த தீயினால் பல ஏக்கர் பரப்பளவில் இருந்த பல அபூர்வ வகை செடி கொடிகள் எரிந்து நாசமானது. பின்னர் தாளவாடி பகுதியில் பெய்த மழையால் காட்டித்தீ தானாகவே அணைந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை தலமலை வனச்சரகத்துக்குட்பட்ட பெஜலட்டி அருகே திடீரென காட்டுத்தீ ஏற்பட்டது. காற்று பலமாக வீசியதால் தீ மளமளவென வனப்பகுதி முழுவதும் பரவத் தொடங்கியது.

இதேபோல் கேர்மாளம் வனச்சரகத்துக்குட்பட்ட கெத்தேசால் வனப்பகுதியிலும் நேற்று மாலை திடீரென காட்டுத்தீ ஏற்பட்டது. அடர்ந்த வனப்பகுதி என்பதாலும் இரவு நேரம் ஆனதால் வனத்துறையினரால் உடனடியாக சம்பவ இடத்திற்கு செல்ல முடியவில்லை. இந்நிலையில் இன்று 2 -வது நாளாக தலமலை, கேர்மாளம் வனப்பகுதியில் காட்டுத்தீ தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கிறது. இதனால் இந்த பகுதியில் இருந்த ஏராளமான மூலிகை, செடி கொடி மரங்கள் தீயில் எரிந்து நாசம் ஆனது. வனத்துறையினர் பல குழுக்களாக பிரிந்து சென்று தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# கனமழை, வெள்ளத்தில் சிக்கி கென்யாவில் 38 பேர் உயிரிழப்பு

## 23 மாவட்டங்கள் பாதிப்பு

**நெய்ரோபி, ஏப். 26-**

கிழக்கு ஆப்ரிக்கா நாடான கென்யாவில் பெய்து வரும் கனமழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி 38 பேர் உயிரிழந்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும் இந்த கனமழையால் கென்யா முழுவதும் வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது. கிழக்கு ஆப்பிரிக்கா நாடான கென்யாவில் கடந்த மாதம் முதலாக கனமழை பெய்து வருகிறது. கடந்த வாரம் பெய்த கனமழையால் பலர் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டனர்.

ஆப்பிரிக்க நாடுகளில் பெய்து வரும் கனமழையால் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. தெருக்களில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடுவதால், நகரின் சில பகுதிகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

கனமழையால் நாடு முழுவதும் 23 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 110,000-க்கும் மேற்பட்ட மக்களை வீடற்றவர்களாக இருக்கின்றனர். 27,716 ஏக்கருக்கும் அதிகமான (சுமார் 112 சதுர கிலோ மீட்டர்) பயிர்கள் அழிந்துள்ளது. சுமார் 5,000 கால்நடைகள் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கென்யாவில் வரலாறு காணாத கனமழை பெய்துள்ளது என்றும் சில பகுதிகளில் ஒரே நாளில் 200 மிமீ வரை மழை பெய்துள்ளது என்றும் கென்யா வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வெள்ளம் அதிகம் உள்ள பகுதிகளில் வசிப்பவர்களை மேடான பகுதிகளுக்கு செல்லுமாறு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். மீட்புப் பணிகளும் முழுவீச்சுடன் நடைபெற்று வருவதாக கூறப்படுகிறது.

# தங்கம் விலை சற்று குறைவு

**சென்னை, ஏப். 26-**

சென்னையில் தங்கம் விலை சவரனுக்கு ரூ.160 குறைந்து ரூ. .53, 680க்கு விற்பனையானது.

தங்கத்தின் விலை எப்பொழுதும் ஏறி, இறங்கி வருவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு ஏப்ரல் மாத தொடக்கத்திலிருந்தே தங்கத்தின் விலை உயர்ந்து வந்தது. இதையடுத்து கிடுகிடுவென தங்கம் விலை அதிகரித்து சவரனுக்கு ரூ. 53 ஆயிரத்தை எட்டியது. இந்த தொடர் விலையேற்றம் நடுத்தர மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

ஒரு சவரன் ஆபரணத்தங்கம் நேற்று முன்தினம் ரூ.53,840க்கு விற்பனையான நிலையில், நேற்று ரூ.160 குறைந்து ரூ.53, 680க்கு விற்பனையானது. வெள்ளி விலையில் எந்த மாற்றம் இல்லாமல் ஒரு கிராம் ரூ.86.50க்கும் ஒரு கிலோ ரூ.86,500-க்கும் விற்பனையானது.

# இறுதி மூச்சு வரை அரசியல் அமைப்பு, ஜனநாயகத்தை காக்க பாடுபடுவேன்

## காங்கிரஸ் தலைவர் கார்கே பேச்சு

**பெங்களூரு, ஏப். 26-**

எனது இறுதி மூச்சு இருக்கும் வரை இந்த நாட்டின் அரசியல் அமைப்பையும், ஜனநாயகத்தையும் காக்க பாடுபடுவேன் என்று கர்நாடக மாநிலம் அப்சல்பூர் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் கார்கே பேசினார்.

பாராளுமன்ற தேர்தல் 2-வது கட்ட வாக்குப்பதிவு கேரளா, கர்நாடகா உள்ளிட்ட 13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 89 தொகுதிகளுக்கு இன்று நடக்கிறது. இதற்கான இறுதிக்கட்ட தேர்தல் பிரச்சாரம் நேற்று முன்தினம் மாலையோடு நிறைவுபெற்றது.

கர்நாடக மாநிலம் கலபுர்கி தொகுதியில் (குல்பர்கா) கடந்த 2019-ம் ஆண்டு போட்டியிட்டு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தோல்வி அடைந்தார். இந்த முறை இதே தொகுதியில் அவரது மருமகன் ராதாகிருஷ்ண தொட்டாமணி போட்டியிடுகிறார்.

அவரை ஆதரித்து மல்லிகார்ஜுன கார்கே பிரச்சாரம் செய்கிறார். தனது சொந்த மாவட்டமான கலபுர்கியின் அப்சல்பூர் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் மல்லிகார்ஜுன கார்கே இது தொடர்பாக பேசியதாவது:-

இந்த முறை இந்த தொகுதியில் காங்கிரசுக்கு நீங்கள் வாக்களிக்கவில்லை என்றாலும் இனி எனக்கான இடம் இங்கு இல்லை என்றும், உங்களின் மனங்களை என்னால் வெல்ல முடியாது என்றும் நினைப்பேன்.

நான் அரசியலுக்காக பிறந்தவன். தேர்தலில் போட்டியிட்டாலும் சரி, போட்டியிடவில்லை என்றாலும் சரி, எனது இறுதி மூச்சு இருக்கும் வரை இந்த நாட்டின் அரசியல் அமைப்பையும், ஜனநாயகத்தையும் காக்க பாடுபடுவேன்.

அதுவரை அரசியலில் இருந்து ஓய்வு பெற மாட்டேன். அதே போல் ஒருவர் தனது கொள்கையில் இருந்து ஒரு போதும் ஓய்வு பெறக் கூடாது. ஆர்.எஸ்.எஸ். மற்றும் பா.ஜ.க.வின் சித்தாந்தங்களை வீழ்த்துவதற்காக நான் பிறந்தேனே தவிர, அவர்கள் முன் சரண் அடைவதற்காக அல்ல.

சித்தராமையாவிடம் கூட நீங்கள் முதல்வர், எம்.எல்.ஏ. போன்ற பதவிகளில் இருந்து ஓய்வு பெறலாம். ஆனால் ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. சித்தாந்தத்தை முறியடிக்கும் வரை அரசியலில் இருந்து ஓய்வு பெற முடியாது என்று பலமுறை கூறி இருக்கிறேன்.

இவ்வாறு கார்கே பேசினார்.

# ஜே.இ.இ. முதன்மை தேர்வில் 56 மாணவர்கள் 100க்கு 100 மதிப்பெண் பெற்று முதலிடம்

**புதுடெல்லி, ஏப். 26-**

ஜே.இ.இ. முதன்மை தேர்வில் 56 மாணவர்கள் 100க்கு 100 மதிப்பெண் பெற்று முதலிடம் பிடித்துள்ளனர்.

நாட்டில் உள்ள 23 இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களில் (ஐ.ஐ.டி) என்.ஐ.டி.யில் சேருவதற்கு ஜே.இ.இ. நுழைவுத் தேர்வு நடத்தப்படுகிறது. என்.ஐ.டி.யில் சேர ஜே.இ.இ. முதன்மை தேர்வில் பங்கேற்பதும், ஐ.ஐ.டி. யில் சேர 2-ம் கட்ட ஜே.இ.இ. உயர்நிலை (அட்வான்ஸ்ட்) தேர்வில் பங்கேற்பதும் அவசியமாகும்.

இரு தாள்கள் அடங்கிய ஜே.இ.இ.முதன்மைத் தேர்வு இரு பதிப்புகளாக நடத்தப்படுகிறது. இரண்டு பதிப்பு தேர்வுகளுக்கு பிறகு அவ்விரு மதிப்பெண்களில் சிறந்ததை கருத்தில் கொண்டு தேர்வர்களின் தர வரிசை வெளியிடப்படுகிறது. இந்த நிலையில் நடப்பு ஆண்டிற்கான முதல் பதிப்பு தேர்வு ஜனவரி-பிப்ரவரியில் நடத்தப்பட்டு தேர்வு முடிவுகளும் வெளியிடப்பட்டன. இந்த மாதத்தில் நடந்த இரண்டாம் பதிப்பு தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டன. நாடு முழுவதும் 10 லட்சம் பேர் எழுதிய தேர்வில் 56 மாணவர்கள் 100-க்கு 100 மதிப்பெண் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

தெலுங்கானாவை சேர்ந்த 15 மாணவர்கள், மராட்டியம் மற்றும் ஆந்திராவில் இருந்து தலா 7 மாணவர்கள் முழு மதிப்பெண் பெற்றுள்ளதாக தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது. முதலிடம் பெற்ற 56 பேரில் 40 பேர் பொதுப்பிரிவை சேர்ந்தவர்கள். ஓ.பி.சி. பிரிவில் 10 பேர் மற்றும் ஜென் - இ.டபிள்யூ.எஸ் பிரிவில் இருந்து 6 பேர் தேர்வு செய்யப்பட்டனர். எஸ்.சி., எஸ்.டி. பிரிவை சேர்ந்த யாரும் முழு மதிப்பெண்களை பெற முடியவில்லை. ஏற்கனவே நடைமுறையில் உள்ள கொள்கையின்படி இரண்டு தேர்வு மதிப்பெண்களின் சிறந்ததை கருத்தில் கொண்டு மாணவர்களின் தரவரிசை பட்டியல் வெளியிடப்படுகின்றன. அதிக மதிப்பெண் பெற்றவர்கள் பட்டியலில் தெலுங்கானா மாநிலம் தொடர்ந்து 3-வது ஆண்டாக முன்னிலையில் உள்ளது.

# உங்களை கொள்ளையடிக்கும் காங்கிரசின் திட்டங்களுக்கு இடையே சுவராக நிற்கிறேன்

## ம.பி. பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பேச்சு

**போபால், ஏப். 26-**

உங்களை கொள்ளையடிக்கும் காங்கிரசின் திட்டங்களுக்கு இடையே சுவராக நிற்கிறேன் என்று மத்திய பிரதேசத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் பிரதமர் மோடி பேசினார்.

பிரதமர் மோடி நேற்று மத்திய பிரதேச மாநிலம் மொரேனாவில் நடந்த பொதுக்கூட்டத்தில் பங்கேற்று பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

பா.ஜ.க.வுக்கு நாட்டை விட பெரிது எதுவுமில்லை. காங்கிரசுக்கு அதன் சொந்த குடும்பமே முக்கிய அளவுகோல். நாட்டிற்காக அதிக பட்ச பங்களிப்பையும், உழைப்பையும், அர்ப்பணிப்பையும் செய்பவரை பின்னால் நிறுத்த வேண்டும் என்பதே காங்கிரசின் கொள்கை.

எனவே, பல ஆண்டுகளாக, ஒரே பதவி, ஒரே ஓய்வூதியம் போன்ற ராணுவ வீரர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற காங்கிரஸ் அனுமதிக்கவில்லை. எங்களது அரசு அமைந்தவுடன் ஒன் ரேங்க்-ஒன் பென்ஷன் திட்டத்தை அமல்படுத்தினோம்.

காங்கிரஸ், வளர்ச்சிக்கு எதிரான கட்சி. காங்கிரஸ் மீண்டும் மதத் துவேஷத்தை கைக்கூலியாகப் பயன்படுத்துகிறது. கர்நாடக காங்கிரஸ் அரசு அங்குள்ள முஸ்லிம் சமுதாய மக்களை இதர பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் என்று அறிவித்துள்ளது.

இதர பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் சமூகத்தில் பல புதிய நபர்களை காங்கிரஸ் சேர்த்தது. முன்பு இதர பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் கல்வி, அரசு வேலைகளில் இடஒதுக்கீடு பெற்றனர். ஆனால் தற்போது அவர்கள் பெற்ற இட ஒதுக்கீடு ரகசியமாக அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்களை இதர பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் பிரிவில் சட்டவிரோதமாக காங்கிரஸ் சேர்த்துள்ளது. இதர பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினரின் உரிமையை கர்நாடக காங்கிரஸ் அரசு பறித்துள்ளது.

மத்திய பிரதேசத்தில் இதர பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருக்கான ஒதுக்கீட்டை தடுக்க காங்கிரஸ் விரும்புகிறது. பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைகளை பறிக்க காங்கிரஸ் பல ஆண்டுகளாக சதி செய்து வருகிறது.

நாட்டின் வளங்களில் முஸ்லிம்களுக்குத்தான் முதல் உரிமை என்று காங்கிரஸ் சொல்கிறது, அதே சமயம் ஏழைகளுக்குத் தான் முதல் உரிமை என்று நான் சொல்கிறேன். பா.ஜ.க. அரசு 80 கோடி மக்களுக்கு மத பாகுபாடு இல்லாமல் இலவச ரேசன் வழங்கியுள்ளது.

ஒரு முஸ்லிம் என்பதற்காக ஒருவருக்கு இலவச ரேசன் கிடைப்பதில்லை என்று நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அம்பேத்கர் மத அடிப்படையில் இட ஒதுக்கீட்டை எதிர்த்தார். ஆனால் அதை காங்கிரஸ் பின்வாசல் வழியாக அளித்துள்ளது.

மக்களின் எதிர்காலத்துடன் விளையாடி, எப்படியாவது நாற்காலியைப் பெற வேண்டும் என்று பல்வேறு விளையாட்டுகளில் காங்கிரஸ் ஈடுபட்டு வருகிறது. காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால், பரம்பரை வரி மூலம் உங்கள் வருமானத்தில் பாதிக்கும் மேல் பறித்து விடும்.

மக்களின் சொத்துக்கள் மற்றும் விலை மதிப்பற்ற பொருட்களை எக்ஸ்ரே மூலம் சோதனை செய்து, மக்களின் நகைகள் மற்றும் சிறு சேமிப்புகளை பறிமுதல் செய்ய காங்கிரஸ் விரும்புகிறது. உங்களை கொள்ளையடிக்கும் காங்கிரசின் திட்டங்களுக்கு இடையே சுவராக நிற்கிறேன். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

# வேட்புமனுவை தாக்கல் செய்தார் ஆந்திர முதல்வர் ஜெகன் மோகன்

**அமராவதி, ஏப். 26-**

ஆந்திர மாநிலம் புலிவெந்துலா தொகுதியில் போட்டியிட அம்மாநில முதல்வரும், ஒய்.எஸ்.ஆர்.சி.பி. கட்சி தலைவருமான ஜெகன் மோகன் ரெட்டி நேற்று தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

ஆந்திர பிரதேச மாநிலத்தில் 25 மக்களவை தொகுதி, 175 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு ஒரே கட்டமாக தேர்தல் மே மாதம்13-ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த 18-ம் தேதி தொடங்கியது. அதன்படி பல்வேறு வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்து வருகின்றனர்.

இந்நிலையில், ஆந்திர மாநிலம் புலிவெந்துலா தொகுதியில் போட்டியிட அம்மாநில முதல்வரும், ஒய்.எஸ்.ஆர்.சி.பி. கட்சி தலைவருமான ஜெகன் மோகன் ரெட்டி நேற்று தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார். அப்போது அவருடன் கடப்பா தொகுதியில் போட்டியிடும் ஒய்.எஸ். அவினாஷ் ரெட்டி மற்றும் கட்சி உறுப்பினர்கள் சிலர் இருந்தனர். முன்னதாக கடந்த 22-ம் தேதி முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி சார்பாக புலிவெந்துலா தொகுதியை சேர்ந்த உள்ளூர் ஒய்.எஸ்.ஆர்.சி.பி. கட்சி தலைவர்கள் வேட்புமனு தாக்கல் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாட்டில் 3 பல்கலைக் கழகங்களில் துணைவேந்தர்களை நியமிக்க வேண்டும்

## ஓ.பன்னீர்செல்வம் கோரிக்கை

**சென்னை, ஏப். 26-**

தமிழகத்தில் உள்ள சென்னைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக் கழகம், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக் கழகம் போன்றவற்றில் துணைவேந்தர்களை நியமிக்க வேண்டும் என்று தி.மு.க. அரசுக்கு முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர் செல்வம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

சென்னைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக் கழகம், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக் கழகம் போன்றவை துணை வேந்தர்கள் இல்லாத பல்கலைக் கழகங்களாக இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இதற்குக் காரணம், இரட்டை நிலைப்பாட்டினை தி.மு.க. எடுத்திருப்பதுதான். தி.மு.க. அரசின் இந்தச் செயல்பாடு காரணமாக கல்வி பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளது. கல்வி என்பது பொதுப்பட்டியலில் உள்ளது.

எனவே, பல்கலைக் கழக மானியக் குழு விதிக்கும் நிபந்தனைகளை பின்பற்றுவது அவசியம். இதனைப் பின்பற்றாமல், துணை வேந்தரை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை தி.மு.க. அரசு எடுத்துள்ளதன் காரணமாக தலைமையில்லாமல் பல்கலைக் கழகங்கள் இயங்கும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

எது எப்படியோ, தி.மு.க. அரசின் மோதல் போக்கு, மாணவ, மாணவியரின் கல்வியை கடுமையாக பாதித்துள்ளது. தமிழக மாணவ, மாணவியரின் எதிர்காலத்தினை கருத்தில் கொண்டு, தற்போதுள்ள நடைமுறைகளின்படி பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர் நியமனத்தை மேற்கொள்ள உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முதல்வர் மு.க.ஸ்டாலினை கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் அறிக்கையை வெளியிட்டார் சரத்பவார்



**மும்பை, ஏப். 26-**

தேசியவாத காங்கிரஸ் சரத் சந்திர பவார் கட்சியின் தேர்தல் அறிக்கையை வெளியிட்டார் அக்கட்சியின் தேசியத் தலைவர் சரத்பவார்.

இந்தியாவின் 18வது பாராளுமன்ற தேர்தல் ஏப்.19 ஆம் தேதி தொடங்கி ஜூன் 1 ஆம் தேதி வரை நடைபெறுகிறது. மொத்தம் 7 கட்டங்களாக நடைபெறும் தேர்தலில் நாட்டில் உள்ள 21 மாநிலங்களில் 102 தொகுதிகளில் முதற்கட்ட வாக்குப்பதிவு ஏப்ரல் 19ம் தேதி நடந்து முடிந்துள்ளது. இதில் தமிழ்நாட்டில் உள்ள 39 தொகுதிகளிலும் ஒரேகட்டமாக வாக்குப்பதிவு நடைபெற்று முடிந்துள்ளது.

இதனையடுத்து இன்று (ஏப். 26ம் தேதி) இரண்டாம் கட்ட தேர்தல் 13 மாநிலங்களின் 83 தொகுதிகளில் நடைபெறுகிறது. இன்று இரண்டாம் கட்ட தேர்தல் நடைபெற உள்ளதால் நேற்று முன்தினத்தோடு தேர்தல் பிரச்சாரம் முடிவுக்கு வந்தது. காஷ்மீரின் 370 பிரிவு ரத்து செய்யப்பட்ட பின்னர் நடைபெறும் முதல் தேர்தல் என்பதால் ஜம்மு மற்றும் காஷ்மீரில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்தியா கூட்டணியில் அங்கம் வகிக்கும் சரத் பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் சரத் சந்திர பவார் கட்சி தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளது. மக்களவைத் தேர்தலை முன்னிட்டு அக்கட்சியின் தலைவர் சரத் பவார் தேர்தல் அறிக்கையை வெளியிட்டார். இதன் பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அக்கட்சியின் மகாராஷ்டிரா மாநிலத் தலைவர் ஜெயந்த் பாடீல் தெரிவித்ததாவது..

" எங்கள் தேர்தல் அறிக்கையை வெளியிடுகிறோம், தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ள விஷயங்களை எங்கள் தலைவர்கள் பாராளுமன்றத்தில் எழுப்புவார்கள். நாட்டில் பணவீக்கம் அதிகரித்து வருகிறது, விவசாயிகள் மோசமான நிலையில் உள்ளனர், வேலையின்மை உச்சத்தில் உள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில், மத்திய அரசின் விசாரணை ஏஜென்சிகளின் தவறான பயன்பாடு மற்றும் தனியார்மயமாக்கல் போன்ற பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றன.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் சமையல் எரிவாயு சிலிண்டர், பெட்ரோல், டீசல் விலையை குறைப்போம். அதேபோல காலியாக உள்ள அரசு பணியிடங்களை நிரப்புவோம். மேலும் பெண்களின் இடஒதுக்கீடு மற்றும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய பாடுபடுவோம்" என தெரிவித்துள்ளார்.

# குருவித்துறையில் வரும் 29-ம் தேதி குருப்பெயர்ச்சி விழா தொடக்கம்

**மதுரை, ஏப். 26-**

மதுரை மாவட்டம் குருவித்துறையில் வரும் 29-ம் தேதி குருப்பெயர்ச்சி விழா லட்சார்ச்சனை நிகழ்ச்சியுடன் துவங்குகிறது. குருப்பெயர்ச்சி விழா ஏற்பாடுகளை அதிகாரிகள் தீவிரமாக செய்து வருகின்றனர்.

மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே குருவித்துறை சித்திர ரத வல்லப பெருமாள் கோவில் மிகவும் பிரசித்தி பெற்றது. இங்கு சித்திர ரத வல்லபபெருமாளை நோக்கி குருபகவான் தவக் கோலத்தில் சுயம்புவாக எழுந்தருளி உள்ளார். அருகில் சக்கரத்தாழ்வார் உள்ளார்.

இங்கு குருப்பெயர்ச்சி விழா 3 நாட்கள் நடைபெறும். அதன்படி இந்த ஆண்டு வருகிற 29-ம் தேதி காலை 9.30 மணிக்கு லட்சார்ச்சனை நிகழ்ச்சியுடன் குருப்பெயர்ச்சி விழா தொடங்குகிறது. 1-ம் தேதி (புதன்கிழமை) பிற்பகல் 12 மணி வரை தொடர்ந்து 3 நாட்கள் லட்சார்ச்சனை நடைபெறும்.

அன்று மதியம் 3 மணி அளவில் யாகசாலை தொடங்கி 5.21 மணிக்குள் பரிகார மகாயாகம், மகா பூர்ணாகுதி, திருமஞ்சனம், சிறப்பு பூஜைகள் நடைபெறுகிறது.

குருப்பெயர்ச்சியை முன்னிட்டு ரிஷபம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம், மீனம் ஆகிய ராசிகளுக்கு பரிகாரம் செய்ய வேண்டும்.

குருப்பெயர்ச்சியை முன்னிட்டு லட்சார்ச்சனை மற்றும் பரிகாரம் செய்ய விரும்பும் ராசிக்காரரர்கள் முன்பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள், வாடிப்பட்டி தாசில்தார் மூர்த்தி, சமயநல்லூர் துணை கண்காணிப்பாளர் ஆனந்தராஜ் மற்றும் சுகாதாரத்துறையினர் குருப்பெயர்ச்சி விழா ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்து வருகின்றனர்.

குருப்பெயர்ச்சியை முன்னிட்டு சிறப்பு பஸ் வசதி செய்யப்பட்டு வருகிறது. விழா ஏற்பாடுகளை செயல் அலுவலர் கார்த்திகை செல்வி, கோவில் பணியாளர்கள் நாகராஜன், மணி, நித்தியா, ஜனார்த்தனன் ஆகியோர் செய்து வருகின்றனர்.

குருப்பெயர்ச்சி விழாவை முன்னிட்டு அன்று இரவு 10 மணி வரை தரிசனத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தினசரி காலை 8 மணி முதல் பகல் 12.30 மணி வரையும், பகல் 3.30 மணி முதல் மாலை 6 மணி வரையும், வியாழக்கிழமை அன்று காலை 7.30 மணி முதல் பகல் 2 மணி வரையும், பகல் 3.30 மணி முதல் இரவு 7 மணி வரையும் பக்தர்களுடைய வசதிக்காக தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

# காங்கிரசில் இணைகிறார் நடிகர் மன்சூர் அலிகான்

## செல்வபெருந்தகையிடம் கடிதம் அளித்தார்

**சென்னை, ஏப். 26-**

சென்னை சத்யமூர்த்தி பவனில் தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வபெருந்தகையை சந்தித்த நடிகர் மன்சூர் அலிகான் ராகுல் காந்தி முன்னிலையில் காங்கிரஸ் கட்சியில் சேர விருப்பம் தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளார். அப்போது அவர் தனது இந்திய ஜனநாயக புலிகள் கட்சியை காங்கிரசுடன் இணைக்க முடிவு செய்துள்ளதாக தெரிவித்தார்.

இந்திய ஜனநாயக புலிகள் என்ற கட்சியை தொடங்கிய நடிகர் மன்சூர் அலிகான் வேலூர் தொகுதியில் பலாப்பழ சின்னத்தில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிட்டார்.

இந்த நிலையில், சென்னை சென்னை சத்யமூர்த்தி பவனில் தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகையை நடிகர் மன்சூர் அலிகான் நேற்று சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பின் போது ராகுல் காந்தி முன்னிலையில் காங்கிரஸ் கட்சியில் சேர விருப்பம் தெரிவித்து மன்சூர் அலிகான் கடிதம் கொடுத்துள்ளார். அதன் பின்னர் செய்தியாளர்களிடம் நடிகர் மன்சூர் அலிகான் கூறியதாவது:-

காங்கிரஸ் கட்சியில் இணைவதற்கு கடிதம் கொடுத்துள்ளேன். முதலில் காங்கிரஸ் கட்சியில் தான் இருந்தேன். மீண்டும் தாய் கட்சியில் இணைய உள்ளேன். இந்திய ஜனநாயக புலிகள் கட்சியை காங்கிரசுடன் இணைக்க முடிவு செய்துள்ளேன்.

நான் போட்டியிட்ட வேலூர் தொகுதியை தவிர, மற்ற இடங்களில் இண்டியா கூட்டணியை ஆதரிப்பதாகவும், பிரியங்கா காந்தி அல்லது ராகுல் காந்தி பிரதமர் ஆவார்கள் என்ற எனது விருப்பத்தை ஏற்கெனவே தெரிவித்திருந்தேன்.

கடந்த 10 ஆண்டுகளாக நாட்டை ஆண்ட பிரதமர் மோடி நாட்டுக்காக எதையும் செய்யவில்லை. தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக பிரதமர் எதையாவது பேசி ஒரு குழப்பத்தை உண்டாக்குகிறார் என்று கூறினார்.

# புதிதாக 7 ஆயிரம் பஸ்கள் வாங்க விரைவில் டெண்டர்

## போக்குவரத்துதுறை அமைச்சர் சிவசங்கர் தகவல்

**கடலூர், ஏப். 26-**

புதியதாக 7 ஆயிரம் பஸ்கள் வாங்க டெண்டர் விடப்பட்டு விரைவில் வரவுள்ளது என்று தமிழக போக்குவரத்து த்துறை அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் சிவசங்கர் வழக்கு தொடர்பாக அவர் உள்ளிட்ட 28 பேர் கடலூர் முதன்மை நீதிமன்ற நடுவர் ஜவகர் முன்னிலையில் நேற்று ஆஜராகினர். அதை தொடர்ந்து இவ்வழக்கின் விசாரணையை வருகின்ற ஜூன் மாதம் 6-ம் தேதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார். இதனைத் தொடர்ந்து அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் நிருபர்களிடம் கூறியதாவது,

திருச்சியில் பஸ்சில் இருந்த இருக்கையை சரி செய்ய முயன்ற போது கீழே விழுந்துள்ளது. இந்த பஸ்சானது, பழைய பஸ். அ.தி.மு.க. ஆட்சியில் புதிய பஸ்கள் வாங்கப்படவில்லை என்பதால் இது போல் நிகழ்வுகள் ஏற்படுகிறது. இந்த ஆட்சியில் புதியதாக 7 ஆயிரம் பஸ்கள் டெண்டர் விடப்பட்டு விரைவில் வரவுள்ளது. தற்போது 350 பஸ்கள் புதிதாக வாங்கப்பட்டு இயங்கி வருகின்றது. மேலும் படிப்படியாக புதிய பஸ்கள் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இனி அதுபோல் நிகழ்வுகள் ஏதும் நடக்காது. மேலும் இந்த ஆண்டுக்குள் அனைத்தும் சரியாகி விடும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழகம் முழுவதும் அரசு பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை மேலும் அதிகரிப்பு

**சென்னை, ஏப். 26-**

2024-25 ஆம் கல்வி ஆண்டில் அரசு பள்ளிகளில் இது வரை 3,24,884 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளதாக பள்ளிக்கல்வி துறை தெரிவித்துள்ளது.

இந்தியாவில் அதிக அரசு பள்ளிகள் உள்ள மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. மாநிலம் முழுதும் 38,000 அரசு பள்ளிகளும், 8,000 அரசு உதவி பெறும் பள்ளிகளும் உள்ளன. இதில் அரசு உதவி பெறும் பள்ளிகள் தனி நிர்வாகத்தை கொண்டு இருந்தாலும், பள்ளியின் பாடத்திட்டம் தொடங்கி தேர்வுகள், விடுமுறை விதிகள் எல்லாம் அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன.

இந்நிலையில் கோடை விடுமுறைக்கு முன்னரே அரசு பள்ளிகளில் 2024-2025 ஆம் கல்வி ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை மார்ச் ஒன்றாம் தேதி முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. மாணவர் சேர்க்கை தொடங்கிய முதல் 5 நாட்களிலேயே எண்ணிக்கை 34 ஆயிரத்தை தாண்டியது. இந்நிலையில் தற்போது வரை 3,24,884 மாணவர்கள் அரசு பள்ளியில் சேர்ந்துள்ளதாக பள்ளிக்கல்வி துறை சார்பில் தெரி விக் கப் பட் டுள் ளது. அதிகபட்சமாக சேலம் மாவட்டத்தில் 21,793 மாணவர்கள் அரசு பள்ளிகளில் சேர்ந்துள்ளனர். குறைந்தபட்சமாக நீலகிரி மாவட்டத்தில்1,741 மாணவர்கள் அரசு பள்ளியில் சேர்ந்து உள்ளனர்.

தமிழ்நாட்டில் உள்ள அரசு, தொடக்க, நடுநிலை,உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வி தரத்தை உயர்த்தும் வகையில் இல்லம் தேடி கல்வி, எண்ணும் எழுத்தும் மற்றும் நான் முதல்வன் திட்டங்களுடன் தற்காப்பு கலைப் பயிற்சி, கல்வி சுற்றுலா உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

# மனித உரிமை குறித்த அமெரிக்க அறிக்கைக்கு மதிப்பு இல்லை: இந்திய வெளியுறவுத்துறை கருத்து

**புதுடில்லி, ஏப். 26-**

இந்தியாவில் மனித உரிமை குறித்து அமெரிக்க அறிக்கைக்கு மதிப்பில்லை என மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் கூறியுள்ளது.

இந்தியாவில் மனித உரிமைகள் குறித்த அறிக்கையை அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டது.

அதில், மணிப்பூரில் இன மோதல் வெடித்த பிறகு குறிப்பிடத்தக்க மனித உரிமை மீறல்கள் நடந்தன என அதில் கூறப்பட்டு இருந்தது.

இது தொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ரன்தீர் ஜெய்ஸ்வால் கூறியதாவது:

இந்த அறிக்கை ஒரு தலைபட்சமானது. இந்தியாவைப் பற்றி புரிந்து கொள்ளாததை காட்டுகிறது. இதற்கு நாங்கள் மதிப்பு கொடுப்பது இல்லை. நீங்களும் அதனையே செய்யுங்கள். இவ்வாறு அவர் கூறினார்.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



பிரதமர் என்பவர், நாட்டின் அரசியலமைப்பின் கீழ் அனைத்து மக்களையும் பாதுகாக்க வேண்டும். பிரதமரின் கட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், அவர்களின் நிறம், மதம், உணவு அல்லது உடையால் யாரையும் வேறுபடுத்தி பார்க்கக்கூடாது. ஆனால், பிரதமர் மோடி நாட்டை பிளவுபடுத்த முயற்சிக்கிறார்.

- பரூக் அப்துல்லா



நாடு முழுவதும் 7 கட்டமாக தேர்தல் நடத்த ஏற்பாடு செய்துள்ளனர். முன்பெல்லாம் மே 2 அல்லது 3-ம் தேதியுடன் தேர்தல் பணிகள் முடிந்து விடும். ஆனால் இந்த ஆண்டு கடுமையான வெயிலுக்கிடையே 3 மாதங்களாக இழுக்கின்றனர். பா.ஜனதாவை திருப்திப்படுத்தவே தேர்தல் கமிஷன் 3 மாத காலத்துக்கு 7 கட்டமாக தேர்தலை ஏற்பாடு செய்துள்ளது.

- மம்தா பானர்ஜி



பா.ஜ., தற்போது நம்பிக்கை இழந்து நிற்கிறது. அவர்கள் தோல்வியை அறிந்துள்ளனர். முதல்கட்ட லோக்சபா தேர்தலுக்கு பிறகு, ஹிந்தி பேசும் மாநிலங்களில் கூட ஏராளமான மக்கள் பா.ஜ.,வுக்கு எதிராக இருப்பதை உணர்ந்துவிட்டனர். இது பா.ஜ.,வுக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

- சசிதரூர்



கேரளாவில் எந்த தொகுதியிலும் பா.ஜ.,2ம் இடத்தில் கூட வராது. காங்கிரசுடன் எந்த சமரசமும் செய்து கொள்ள மாட்டோம். கடந்த தேர்தலில் வயநாடு தொகுதியில் வெற்றி பெற்ற ராகுல் மக்களுக்காக எதும் செய்யவில்லை.இந்தியா ஒரு ஜனநாயக நாடு. தேசிய ஜனநாயக கூட்டணி முழு தோல்வியை சந்திக்கும்.

- பினராயி விஜயன்

# பரமக்குடியில் அ.தி.மு.க. சார்பில் நீர்,மோர் பந்தல் திறப்பு



**பரமக்குடி, ஏப். 26-**

பரமக்குடி பஸ் நிலையம் எதிரில் நகர் அம்மா பேரவை சார்பில் நீர், மோர் பந்தல் திறப்பு விழா நடந்தது. இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி பஸ் நிலையம் எதிரில் அதிமுக நகர் அம்மா பேரவை சார்பில் செயலாளர் வடமலையான் எம்.சி ஏற்பாட்டில் நடைபெற்ற நீர் மோர் பந்தல் திறப்பு விழாவிற்கு அதிமுக இராமநாதபுரம் மாவட்ட செயலாளர் எம்.ஏ.முனியசாமி தலைமை தாங்கினார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் முத்தையா முன்னிலை வகித்தார்.நகர் செயலாளர் ஜமால் வரவேற்றார்.இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் ஜெயபெருமாள் நீர்,மோர் பந்தலை ரிப்பன் வெட்டி துவக்கி வைத்து பொதுமக்களுக்கு தர்பூசணி பழம், இளநீர், சர்பத்,மோர் ஆகியவற்றை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தகவல் தொழில்நுட்ப பிரிவு விருதுநகர் மண்டல செயலாளர் சரவணகுமார், மண்டல துணைச் செயலாளர் அரவிந்த்,பரமக்குடி மேற்கு ஒன்றிய செயலாளர் சண்முகம், நயினார் கோவில் தெற்கு ஒன்றிய செயலாளர் பூமிநாதன்,பரமக்குடி கிழக்கு ஒன்றிய செயலாளர் சுப்பிரமணியன், இராமநாதபுரம் மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் நாகராஜன் ராஜா,நகர் மன்ற உறுப்பினர் முத்துக்குமார்,நகர் அம்மா பேரவை துணைச் செயலாளர் கார்த்திக் உட்பட நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# அருப்புக்கோட்டை ஆயிரம் கண் மாரியம்மன் கோவிலில் பொங்கல் விழா கொடியேற்றம்



**அருப்புக்கோட்டை, ஏப். 26-**

அருப்புக்கோட்டை ஆயிரம் கண் மாரியம்மன் கோவில் பங்குனி பொங்கல் திருவிழா கொடியேற்றத்துடன் துவங்கியது. திருவிழாவை முன்னிட்டு நேற்றைய முன் தினம் இரவு கொடி மரத்திற்கு அபிஷேகம் பூஜை செய்யப்பட்டது. முன்னதாக கொடி சேலை உறவின்முறை அலுவலகத்தில் இருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு பின்னர் கொடி மரத்தில் ஏற்றப்பட்டது. 12 நாட்கள் நடக்கும் திருவிழாவில் எட்டாம் நாள் விழாவாக பெண்கள் கோயில் முன்பு பொங்கல் வைத்து நேர்த்திக்கடன் செலுத்துவார்.ஒன்பதாம் நாள் விழா பக்தர்கள் விரதமிருந்து 21, 51 ,101, சட்டி எடுத்து நிறுத்துக்கடன் செலுத்துவர். அன்று அதிகாலை பிரதமிருந்த பக்தர்கள் பூக்குழியில் இறங்கி நேர்த்திக் கடனை செலுத்துவர். மாலை ஐந்து மணிக்கு தேரோட்டம் நடக்கும். திருத்தேரில் அம்மன் ரத வீதியில் வந்து பொதுமக்களுக்கு அருள் பாலிப்பார் .விழா ஏற்பாடுகளை அருப்புக்கோட்டை புளியம்பட்டி திருநகரம் சாலியர் உறவின்முறை தலைவர் சுந்தர மகாலிங்கம், துணை தலைவர் சுந்தர்ராஜன் செயலாளர் மற்றும் நிர்வாகிகள் செய்திருந்தனர்

# குமாரத்தில் அ.தி.மு.க. சார்பில் நீர்மோர் பந்தல் திறப்பு: முன்னாள் அமைச்சர் உதயகுமார் தொடங்கி வைத்தார்



**மதுரை, ஏப். 26-**

மதுரை புறநகர் மேற்கு மாவட்டம், மதுரை மேற்கு (தெற்கு) ஒன்றியத்தின் சார்பில் குமாரத்தில் நீர் மோர் பந்தல் திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதற்கு ஒன்றிய செயலாளர் அரியூர் ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார். முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் தேனி நாடாளுமன்ற வேட்பாளர் வி.டி. நாராயணசாமி, அமைப்புச் செயலாளர் இ.மகேந்திரன், மாவட்ட அவைத் தலைவர் சி.முருகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழரசன் ,கருப்பையா, மாணிக்கம் ,மாநில அம்மா பேரவை நிர்வாகிகள் வெற்றிவேல், தனராஜன், ராஜேஷ் கண்ணா, மாவட்ட அம்மா பேரவை செயலாளர் தமிழழகன், ஒன்றிய செயலாளர்கள் ரவிச்சந்திரன், செல்லம்பட்டி ராஜா,மற்றும் இலக்கிய அணி செல்லம்பட்டி ரகு, மீனவரணி சரவணபாண்டி, மாணவரணி துணைச் செயலாளர் முத்து செல்வம், இளைஞர் அணி காசிமாயன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதில் ஆர்.பி.உதயகுமார் பேசுகையில்,

அம்மா தொடங்கி வைத்த விலையில்லா அரிசி திட்டத்தில் முறைகேடு நடைபெற்று வருகிறது. கோவில்பட்டியில் திமுகவை சேர்த்தவர் 3.50 லட்சம் டன் அரிசியை கடத்தி உள்ளார் இதை தட்டிக் கேட்ட வழக்கறிஞரை பெட்ரோல் குண்டு வீசி உள்ளனர். அதே போல் சித்திரை திருவிழாவில் அழகர் ஆற்றில் இறங்கும் நிகழ்ச்சியில் சட்டம் ஒழுங்கு கேள்விக்குறியாக உள்ளது. இதனால் மக்கள் அச்சம் அடைந்துள்ளனர் .

பிரதமர் பரப்புரையில் மதரீதியாக பிரித்து பார்த்து பேசகூடாது, சட்டம் அனைவருக்கும் சமம் உயர்ந்த பதவியில் இருப்பவர்கள் சட்டத்தைப் பிரித்து அழகல்ல, இது போன்று நாடு சந்தித்தது இல்லை தற்போது மரபை மீறி உள்ளார்களா? என்று அச்சம் இன்றைக்கு ஏற்பட்டுள்ளது இதுகுறித்து எடப்பாடியார் விரிவான அறிக்கை வெளியிட்டுள்ளார். அண்ணாமலை ஓட்டுகள் நீக்கப்பட்டுள்ளது என்று கூறுகிறார். தேர்தல் ஆணையம் இது குறித்து ஆய்வு மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# பெரியகுளத்தில் நகர அ.தி.மு.க. சார்பில் நீர்மோர் பந்தல் திறப்பு



**தேனி.ஏப்.26.**

தேனி மாவட்டம் பெரியகுளத்தில் நகர அதிமுக சார்பில் நீர்மோர் பந்தல் திறக்கப்பட்டது.

கோடை காலமான தற்போது வெயிலின் தாக்கம் அதிகரித்த வண்ணம் உள்ளதால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். பொதுமக்களின நலனை கருத்தில் கொண்டு பெரியகுளம் நகர அதிமுக சார்பில் நீர்மோர் பந்தல் அமைக்கப்பட்டு நேற்று திறப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு நகர செயலாளர் பழனியப்பன் தலைமை தாங்கினார். மாவட்ட கழக செயலாளர் முறுக்கோடை ராமர் நீர்மோர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர்மோர், தர்பூசணி, வெள்ளரி ஆகியவற்றை வழங்கி துவக்கி வைத்தார். இவ்விழாவில் மாவட்ட இணை செயலாளர் முத்துலட்சுமிவெங்கடேசன், பெரியகுளம் ஒன்றிய செயலாளர்கள் ராஜகுரு, அன்னப்பிரகாஷ், தேனி நகர செயலாளர் கிருஷ்ணகுமார் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# குதிரை ,காளை மாறுபட்ட ஜோடியுடன் சாரட் வண்டியில் விவசாயிகள் நேர்த்திக்கடன்



**ஒட்டன்சத்திரம். ஏப். 26 .**

திண்டுக்கல் மாவட்டம்அமரபூண்டி வத்தகவுண்டன் வலசை சேர்ந்தவர்கள் சின்னச்சாமி, சிவராஜ், காமராஜ் விவசாயிகளான இவர்கள் மூவரும் நான்கு வயதுள்ள குதிரை, நான்கு வயதுள்ள காளை மாட்டினை சாரட் வண்டியில் பூட்டி ஒட்டன்சத்திரம் அருகேயுள்ள வல்லக்குண்டாபுரம் முத்துமாரியம்மன் கோவிலுக்கு வந்து நேர்த்திக் கடனை நிறைவேற்றி சாமி தரிசனம் செய்தனர். மாறுபட்ட ஜோடியுடன் சாரட் வண்டியில் கோவிலுக்கு வந்ததை அப்பகுதியை சேர்ந்த பொது மக்கள் பக்தர்கள் ஆச்சரியத்துடன் பார்த்துச் சென்றனர்.



திருமங்கலம் அருகே கள்ளிக்குடியில் தொற்று நோய் பரப்பும் தொழிற்சாலையை மூட வலியுறுத்தி மறியலில் ஈடுபட்டு கைதான கிராம மக்களுக்கு அகத்தாப்பட்டி மண்டபத்தில் அ.தி.மு.க. மருத்துவர் அணி மாநில இணை செயலாளர் டாக்டர் சரவணன், துணைச் செயலாளர் டாக்டர் விஜயபாண்டியன் இலவச மருத்துவ பரிசோதனை செய்து மருந்து மாத்திரைகளை வழங்கினர்.

# வேதியியல் மன்ற விழாவில் தங்க மெடல் பெற்ற மாணவிகள்



**இளையான்குடி, ஏப். 26-**

இளையான்குடி டாக்டர் சாகிர் உசேன் கல்லூரியின் வேதியல் துறை சார்பாக பேராசிரியர் அப்பாஸ் அலி வேதியல் மன்ற நிறைவு விழா நடைபெற்றது. துறை தலைவர் சுல்த்தான் செய்யது இப்ராஹிம் அனைவரையும் வரவேற்று பேசினார். கல்லூரி முதல்வர் ஜபருல்லாஹ் கான் தலைமை உரையாற்றினார்.சுயநிதி பாடப் பிரிவு இயக்குனர் சபினுல்லாஹ் கான், கல்வியல் கல்லூரி முதல்வர் முகமது முஸ்தபா, இயற்பியல் துறை தலைவர் முஸ்தாக் அகமது கான் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சிறப்பு விருந்தினராக பெங்களூர் ஐபிஎம் பொறியாளர் ராகவன் தேவநாதன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பல்கலைக்கழக அளவில் தங்கமெடல் பற்ற மாணவிகளுக்கும், சிறந்த மதிப்பெண் பெற்ற மாணவ மாணவியர்களுக்கும் பரிசுகள், பாராட்டு பத்திரம் வழங்கினார். நிகழ்வினை இணை பேராசிரியர் செய்யது அபுதாஹிர் ஒருங்கிணைத்தார்.உதவி பேராசிரியர் ஜெயமுருகன் நன்றி கூறினார். உதவி பேராசிரியர் ரேவதி நிகழ்ச்சி ஏற்பாடுகளை செயதிருந்தார்.

# நத்தம் அருகே வீடு புகுந்து 10 பவுன் தங்க நகை திருட்டு



**நத்தம், ஏப். 26-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே சிறுகுடி-மேற்குத் தெருவை சேர்ந்தவர் பிரகாஷ்(30). இவரது மனைவி மணிமேகலை (26). இவர்களுக்கு 2 குழந்தைகள் உள்ளன. இந்நிலையில் நேற்று முன்தினம் மதியம் வீட்டை பூட்டி விட்டு கடையில் பொருட்கள் வாங்கி விட்டு பிரகாஷ் தனியார் பள்ளியில் நடந்த ஆண்டுவிழாவில் கலந்து கொள்ள குடும்பத்துடன் சென்று விட்டார். இதை நோட்டமிட்ட மர்ம நபர்கள் வீட்டில் புகுந்து பீரோவை உடைத்து 10 பவுன் நகைகளை எடுத்து கொண்டு மாயமாகி விட்டனர்.வெளியில் சென்று விட்டு மாலையில் வீடு திரும்பிய பிரகாஷ் தனது வீட்டின் பூட்டு உடைந்து கிடப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். மேலும் உள்ளே சென்று பார்த்த போது பீரோ உடைக்கப்பட்டு நகைகள் திருடு போனது தெரியவந்தது. இதையடுத்து நத்தம் போலீஸ்-நிலையத்தில் பிரகாஷ் புகார் கொடுத்தார்.அதன் பேரில் நத்தம் போலீசார்கள் சம்பவ இடத்தை நேரில் பார்வையிட்டு விசாரணை நடத்தினர். தொடர்ந்து தடவியல் நிபுணர்கள் வந்து கைரேகைகளை சேகரித்தனர். மேலும் இச்சம்பவம் குறித்து நத்தம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.பட்டப்பகலில் நடந்த இந்த சம்பவம் சிறுகுடி பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# திருமங்கலம் பத்ரகாளி மாரியம்மன் திருக்கோவிலில் வைகாசி திருவிழா

## வரும் 12-ம் தேதி கொடியேற்றத்துடன் கோலாகல துவக்கம்



**திருமங்கலம், ஏப். 26-**

திருமங்கலம் பாண்டிய குல சத்திரிய நாடார்கள் உறவின்முறையைச் சேர்ந்த அருள்மிகு ஸ்ரீபத்ரகாளி மாரியம்மன் தேவஸ்தானம் திருக்கோவில் வைகாசித் திருவிழா வரும் 12-ம் தேதி கொடியேற்றத்துடன் கோலாகலமாக தொடங்கி தொடர்ந்து 13 நாட்கள் நடைபெறுகிறது.

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகரில் பாண்டிய குல சத்திரிய நாடார்கள் உறவின்முறைக்குப் பாத்தியப்பட்ட பழம்பெருமை வாய்ந்த அருள்மிகு ஸ்ரீபத்ரகாளி மாரியம்மன் திருக்கோவில் தேவஸ்தானம்அமைந்துள்ளது.இங்கு ஆண்டு தோறும் வைகாசி மாதத்தில் வைகாசி திருவிழா 13 நாட்களுக்கு கோலாகலமாக நடைபெறுவது வழக்கம்.இந்நிலையில் 2024ம் ஆண்டு குரோதி வருட வைகாசி திருவிழா வரும் 12-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 11மணியளவில் அருள்மிகு ஸ்ரீபத்ரகாளி மாரியம்மன் திருக்கோவிலில் கொடியேற்றத்துடன் கோலாகலமாக தொடங்குகிறது.

அதன்படி திருவிழாவின் முதல் நாளான மே மாதம் 12-ம்தேதி காலை கொடியேற்றம் முடிந்து இரவு சிம்மவாகனத்தில் ஸ்ரீமாரியம்மன் நகர்வலம் வருகிறார்.இரண்டாம் நாளான 13-ம் தேதி காலை வெள்ளிச் சப்பரத்திலும்,இரவு பூதவாகனத்திலும் ஸ்ரீமாரியம்மன் நகர்வலம் வருகிறார்.மூன்றாம் நாளான 14-ம் தேதி காலை வெள்ளிச்சப்பரத்திலும்,இரவு அன்ன வாகனத்திலும் ஸ்ரீமாரியம்மன் நகர்வலம் வருகிறார்.நான்காம் நாளான 15-ம் தேதி காலை வெள்ளிச்சப்பரத்திலும்,இரவு காமதேனு வாகனத்திலும் ஸ்ரீமாரியம்மன் நகர்வலம் வருகிறார்.ஐந்தாம் நாளான 16-ம் தேதி காலை வெள்ளிச்சப்பரத்திலும்,இரவு பெரியகுதிரை வாகனத்திலும் ஸ்ரீமாரியம்மன் நகர்வலம் வருகிறார்.ஆறாம் நாளான 17-ம் தேதி காலை வெள்ளிச் சப்பரத்தில் ஸ்ரீபத்ரகாளியம்மன், ஸ்ரீமாரியம்மன் நகர்வலம் வந்து அக்காரெட்டி நாடார் மண்டகப்படி சேர்தல்,பின்னர் இரவு 1மணிக்கு அம்மன்கள் ரிஷப வாகனங்களில் புறப்பட்டு கழுவேற்ற பொட்டலில் சமணர்கள் கழுவேற்றம்,சம்பந்த மூர்த்திகள் தரிசனம் முடிந்து கோவில் வந்து சேர்தல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

விழாவின் ஏழாம் நாளான 18-ம் தேதி காலை வெள்ளிச்சப்பரத்திலும், இரவு புஷ்பப் பல்லக்கில் ஸ்ரீ மாரியம்மன் நகர்வலம் வருகிறார்.எட்டாம் நாளான 19-ம் தேதி காலை தண்டிகையிலும்,இரவு புஷ்பசப்பரத்திலும் ஸ்ரீமாரியம்மன் நகர்வலம் வருகிறார்.ஒன்பதாம் நாளான 20-ம் தேதி மாலை கோவிலிலிருந்து முளைப்பாரி எழுந்தருளி நகர்வலம் வந்து ஆற்றில்சேர்த்தல்,இரவு சேஷவாகனத்தில் ஸ்ரீமாரியம்மன் நகர்வலம் வருகிறார்.பத்தாம் நாளான 21-ம் தேதி பகலில் ஸ்ரீபத்ரகாளியம்மன்,ஸ்ரீமாரியம்மன் வெள்ளிச்சப்பரத்தில் நகர்வலம்,இரவு 1.15 மணியளவில் வெள்ளிசிம்ம வாகனத்தில் ஸ்ரீபத்ரகாளியம்மனும்,குதிரை வாகனத்தில் ஸ்ரீமாரியம்மனும் புறப்பட்டு வந்து கோவில் முன்பாக மஹிஷா சூரசம்ஹாரம் நடைபெறுகிறது.பதினொன்றாம் நாளான 22-ம் தேதி காலை வெள்ளிச்சப்பரத்தில் ஸ்ரீமாரியம்மன் நகர்வலம்,இரவு கொலு மண்டபத்தில் லட்சதீபம், மாவிளக்குடன் ஸ்ரீமாரியம்மன் பக்தி உலாத்துதல் நடைபெறுகிறது.

திருவிழாவின் பன்னிரெண்டாம் நாளான 23-ம் தேதி காலையில் வெள்ளிச் சப்பரத்திலும், இரவில் யானை வாகனத்திலும் ஸ்ரீமாரியம்மன் நகர்வலம் வருகிறார்.விழாவின் கடைசி நாளான 24-ம் தேதி காலை 9.15மணிக்கு குதிரைவாகனத்தில் புறப்பட்டு கழுவேற்ற பொட்டலில் ஆயிரம் பொன் சப்பரத்தில் ஸ்ரீமாரியம்மன் எழுந்தருளல், மாலை 3மணிக்கு குண்டாற்று ஊத்து மண்டபம் வந்து சேர்ந்து தீர்த்தவாரி,இரவு 10மணிக்கு மேல் தசாவதாரம்,பின்னர் சுவாமி ரிஷபவாகனத்தில் எழுந்தருளி கோவில் வந்து கொடியிறக்குதல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.இந்த வைகாசி திருவிழாவினை முன்னிட்டு பி.கே.என் திடலில் மாபெரும் பொருட்காட்சியும், பொதுமக்களின் பொழுது போக்கிற்காக தினம் தோறும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.இந்த பாரம்பரிய வைகாசி திருவிழாவிற்கான விழாவிற்கான ஏற்பாடுகளை திருமங்கலம் பாண்டியகுல சத்திரிய நாடார்கள் உறவின் முறையார் சிறப்புடன் செய்து வருகின்றனர்

# சமத்துவபுரத்தில் மதிப்பு கூட்டு பொருட்களை சந்தைப்படுத்துதல் குறித்து செயல்விளக்கம்



**ஒட்டன்சத்திரம், ஏப். 26-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகேயுள்ள சமத்துவபுரத்தில், வேடசந்தூர் எஸ்.ஆர்.எஸ். வேளாண் தொழில்நுட்ப கல்லூரியை சேர்ந்த எட்டு மாணவிகள் கிராமப்புற பணி அனுபவ திட்டத்தின் கீழ் விவசாயிகளை சந்தித்து மதிப்பு கூட்டு பொருட்கள் பற்றி கூறினார்கள்.

மதிப்பு கூட்டப்பட்ட விவசாயம் என்பது முதன்மை விவசாயப் பொருட்களின் மதிப்பை அதிகரிக்கும் உற்பத்தி செயல்முறைகளை பொதுவாகக் குறிக்கிறது . பேக்கேஜிங், பதப்படுத்துதல், குளிர்வித்தல், உலர்த்துதல், பிரித்தெடுத்தல் மற்றும் பிற செயல்முறைகள் மூலம் பொருட்களின் மதிப்பை கூட்டலாம். ஒரு தயாரிப்பாளர் மக்காச்சோளம் விவசாயம் செய்தால், அவர் சோளத்தை மட்டும் விற்பனை செய்யாமல் , சோளமாவு மற்றும் சோளப்பொரிகளாக மாற்றம் செய்து இவற்றின் மதிப்பை கூட்ட வேண்டும். இதுபோன்ற பல எடுத்துக்காட்டுகளை கூறி விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்

# அருப்புக்கோட்டை அருகே போக்சோ சட்டத்தில் இளைஞர் கைது

**விருதுநகர், ஏப். 26-**

காரியாபட்டி அருகே உள்ள ஊரைச் சேர்ந்த கூலி வேலை செய்து வரும் தம்பதியரின் 17 வயது மகள் ஒன்பதாம் வகுப்பு வரை முடித்துவிட்டு வீட்டில் இருந்து வந்துள்ளார். இந்நிலையில் அந்த சிறுமி தனது உறவினர் கருப்பசாமி என்பவரை காதலித்து வந்ததாகவும் இதற்கு இருவரின் வீட்டிலும் எதிர்ப்பு தெரிவித்ததால், இருவரும் திருமணம் செய்து கொண்டதாகவும், கூறப்படுகிறது. இதனால் அந்த சிறுமி தற்போது 6 மாத கர்ப்பமாக இருப்பதாகவும் கூறப்படுகிறது. இது குறித்து தகவல் அறிந்த காரியாபட்டி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் விரிவாக்க அலுவலராக பணிபுரிந்து வரும் மாரியம்மாள் சிறுமியை குழந்தை திருமணம் செய்து கர்ப்பம் ஆக்கிய கருப்பசாமி மீது நடவடிக்கை எடுக்க கோரி அருப்புக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அவர் அளித்த புகார் அடிப்படையில் மகளிர் போலீசார் கருப்பசாமி மீது போக்சோ வழக்கு பதிந்துள்ளனர். மேலும் அந்த சிறுமி விருதுநகர் குழந்தைகள் நல குழுமத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்



இந்தியா கூட்டணி சார்பாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் காங்கிரஸ் கட்சி சார்பாக போட்டியிட்ட வேட்பாளர்கள் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை சந்தித்து நன்றி தெரிவித்தனர். இதில் புதுச்சேரி வேட்பாளர் வைத்திலிங்கம் மற்றும் காங்கிரஸ் சட்டமன்ற கட்சி தலைவர் வைத்தியநாதன் பங்கேற்றனர்.

### வயநாடு தொகுதியில் போட்டியிடும்

## ராகுல் காந்தியை ஆதரித்து ராகுல் காந்தி தேசிய பேரவை தலைவர் ஆர்.இ.சேகர், புதுவை காங்கிரஸ் நிர்வாகிகள் வாக்கு சேகரிப்பு



புதுச்சேரி ஏப். 26

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி கேரள மாநிலம் வய நாடு தொகுதியில் போட்டியிடுவதை அடுத்து ராகுல் காந்தி தேசிய பேரவை சார்பில் ராகுல் காந்தி போட்டியிடும் வய நாடு மக்களவை தொகுதியில் பேரவை தலைவர் ஆர். இ. சேகர் தலைமையில் புதுச்சேரி மாநிலம் மாகி சட்டமன்ற உறுப்பினர் ரமேஷ் பரம்பத், முன்னாள் அமைச்சர் கந்தசாமி, கேரள சட்டமன்ற உறுப்பினரும் பொறுப்பாளருமான அணில் குமார் வயநாடு மாவட்ட தலைவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான அப்பச்சன் முன்னிலையில் புதுச்சேரி காங்கிரஸார் பிரச்சாரம் மேற்கொண்டனர்

இதில் மாகி வட்டார காங்கிரஸ் கமிட்டி தலைவர் மோகன் சுரேஷ் தயாளன் திருநாவுக்கரசு புதுச்சேரி மாநில இளைஞர் காங்கிரஸ் துணைத் தலைவர் சமீர் பிரபு தஞ்சாவூர் சிவஞானம் ஹரி கிருஷ்ணன் பன்னீர் செல்வம் சீனிவாசன் ரஞ்சித் ராஜசேகர் பெரிய நாயகி புஷ்பா ருக்குமணி ஆகியோர் வயநாடு கல்பெட்டா சுல்தான் பதேரி ஆகிய பகுதிகளில் வீடு வீடாக சென்று துண்டு பிரசார வழங்கி கை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.

மேலும் அகில இந்திய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பேசி பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்



புதுச்சேரி சட்டப்பேரவை வளாகத்தில் உள்ள அனைத்து அலுவலகங்களிலும் தீயணைப்பு கருவி பொருத்தப்பட்டு எப்படி கையாள்வது குறித்து செயல் விளக்கம் சட்டப்பேரவை செயலர் தயாளன் முன்னிலையில் சட்டப்பேரவை காவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

### கலசப்பாக்கம் பஸ் நிலையத்தில்

## திருவண்ணாமலை தெற்கு மாவட்ட அதிமுக சார்பில் தண்ணீர் பந்தல்

### எம்எல்ஏ அக்ரி கிருஷ்ணமூர்த்தி திறந்து வைத்தார்



கலசபாக்கம் ஏப் 26

கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட கலசபாக்கம் கோவில் மா தி மங் க லம் காஞ்சி சி-கெங்கம்பட்டு பெரியகுளம் ஆகிய பஸ் நிலையங்களிலும் மற்றும் பல்வேறு பகுதிகளில் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட அதிமுக சார்பில் தண்ணீர் பந்தலை தெற்கு மாவட்ட செயலாளரும் எம் எல்ஏவுமான அக்ரி கிருஷ்ண மூர்த்தி நேற்று திறந்து வைத்தார் அப்போது அவர் பேசிய தாவது

தமிழகத்தில் கோடை வெயில் அதிக அளவு வாட்டி வதைக்கிறது குறிப்பாக திருவண்ணாமலை மாவட்டத்தில் வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகமாக உள்ளது

இதனால் மக்கள் அனைவரும் வெளியில் வருவதற்கு தயங்குகின்றனர் மேலும் கிராமப்புறங்களில் உள்ள மக்கள் வசதி படைத்தவர்கள் அல்ல என்பதை கருத்தில் கொண்டு மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா இருந்தபோது அனைத்து பகுதிகளிலும் நீர் மோர் பந்தல் திறந்து மக்களுக்கு சேவை செய்யும் இயக்கமாக அதிமுக இருந்து வந்தது இதன் வழியில் பொதுச் செயலாளர் பழனிச்சாமியின் உத்தரவின் பெயரில் இன்று இந்த தண்ணீர் பந்தல் திறக்கப்படுகிறது

இன்று முதல் தினமும் மக்களுக்கு குடிக்க தண்ணீர் இளநீர் மோர் தர்பூசணி முலாம்பழம் ஆகியவைகள் வழங்கப்படும் இதனை மக்கள் வீணாக்காமல் பயன்படுத்தி தாகத்தை தணித்துக் கொள்ள வேண்டும் மேலும் மக்கள் யாரும் அனாவசியமாக இந்த வெயிலில் வெளியில் வருவதை தவிர்த்துக் கொள்ளுங்கள் அதுவே உங்களை பாதுகாப்பதற்கு நல்ல வழியாகும் இவ்வாறு பேசினார்

நிகழ்ச்சியில் தெற்கு மாவட்ட அவை தலைவர் நாராயணன்ஒன்றிய செயலாளர்கள் கிருஷ்ணமூர்த்தி கோவிந்தராஜ் ரமேஷ் கலியபெருமாள் மாவட்ட கலை பிரிவு செயலாளர் துரை மாவட்ட கவுன்சிலர் அரவிந்தன் மாவட்ட வழக்கறிஞர் பிரிவு இணை செயலாளர் எழிலமாறன் மாவட்ட வர்த்தக அணி இணை செயலாளர் சிவக்குமார் உட்பட கட்சி நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
No. 61, Cuddalore Main Road, Mudaliyarpet, Puducherry-4.
Ph:0413-2280613
E-Mail: pondyedi@thinaboomi.com
RNI.Regn No.Pontam 2002/7660
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

### விழுப்புரம் மாவட்ட அளவிலான

# தனியார் பள்ளி வாகனங்களின் கூட்டாய்வு பணி: கலெக்டர் சி.பழனி துவக்கி வைத்து ஆய்வு



விழுப்புரம் ஏப். 26

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்டவளாக மைதானத்தில்வட்டார போக்குவரத்துத்துறையின் சார்பில் விழுப்புரம் மற்றும் திண்டிவனம் வட்டார போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் செஞ்சி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலக மூலம்மாவட்ட அளவிலான தனியார்பள்ளி வாகனங்களின் கூட்டாய்வு செய்யும் பணியினை கலெக்டர் டாக்டர் சி.பழனி துவக்கி வைத்து பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கலெக்டர் தெரிவிக்கையில்விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள விழுப்புரம் வட்டார போக்குவரத்து அலுவலகம் சார்பில் விழுப்புரம் விக்கிரவாண்டி,திருவெண்ணெய்நல்லூர்கண்டாச்சிபுரம் ஆகிய வட்டங்களில் செயல்படும் 66 பள்ளிகளில் 243 வாகனங்களும் மற்றும் திண்டிவனம் வட்டார போக்குவரத்து அலுவலகங்கள் சார்பில் திண்டிவனம்வானூர் மரக்காணம் ஆகிய வட்டங்களில் செயல்படும் 36 பள்ளிகளில் 187 பள்ளி வாகனங்கள் செஞ்சி மோட்டார் ஆய்வாளர் அலுவலகம் சார்பில் செஞ்சி மேல் ம லை ய னூர் ஆகிய வட்டங்களில் 27 பள்ளிகளில் 93 பள்ளி வாகனங்கள் என மொத்தம் 129 தனியார் பள்ளிகளில் உள்ள 523 தனியார் பள்ளிகளில் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. அந்த வகையில் இன்றைய தினம்325 பள்ளி வாகனங்களில் ஆய்வு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதில் 64 வாகனங்கள் குறைபாடுகள் கண்டறியப்பட்டதன் காரணமாக தகுதி இழப்பு செய்யப்பட்டது.

மேலும்அரசு விதிகளுக்குட்பட்டு போக்குவரத்து ஆய்வாளர்கள் மூலம் ஆய்வு செய்யப்படுகிறது. பள்ளி வாகனத்தின் உறுதித்தன்மை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்வாகனம் முழுவதும் மஞ்சள் நிறத்தில் வண்ணம் பூசப்பட்டுள்ளது குறித்தும் வாகனத்தில் மாணவமாணவியர்கள் படத்துடன் கூடிய லோகோ ஒட்டப்பட்டுள்ளது குறித்தும் தீயணைப்பு கருவிகள் வைத்திருப்பதோவெருடம் ஒரு முறை புதுப்பிக்கப்பட்டுள்ளதா அதற்கான சான்று உள்ளதா என்பது குறித்தும் ஜன்னல்களுக்கு குறுக்கு கம்பிகள்வாகனத்தின் முன்பக்கம் மற்றும் பின்பக்கம் உள்ள கண்காணிப்பு கேமரா வசதிவாகனம் இடதுபுறத்தில் பள்ளியின்பெயர்விலாசம்தொலைபேசி மற்றும் அலைபேசி எண்கள் எழுதப்பட்டிருக்க வேண்டும். வாகனத்தின் பின் இடது புறத்தில் பள்ளி வாகன பொறுப்பாளர் தொலைபேசி எண்வட்டார போக்குவரத்து அலுவலக தொலைபேசி எண்பள்ளி எல்லைக்குட்பட்ட காவல் நிலையத்தின் தொலைபேசி எண் மற்றும் பள்ளியின் மின்னஞ்சல் முகவரி எழுதப்பட்டுள்ளது குறித்தும்பள்ளி வாகனத்தின் கதவுகள் மற்றும் தாழ்ப்பாள்களும் நல்ல முறையில் இயங்குவது குறித்தும்மாணவர்கள் எளிதில் பேருந்துகளில் ஏறிஇறங்கும் வகையிலான பேருந்து படிக்கட்டுகள் இருப்பதோடு உறுதித்தன்மை குறித்தும் முதலுதவி பெட்டி இருப்பு குறித்தும் வாகன வேக கட்டுப்பாட்டு கருவி வசதிகள்ஒட்டுநரை எச்சரிக்கும் வகையிலான சென்சார் மற்றும் ஜிபிஎஸ் கருவி உள்ளிட்டவைகள் குறித்தும். மேலும்ஒவ்வொரு வாகனத்திலும் வலது பின்புறத்திலோஅல்லது பின் வலது புறத்திலோ 150 ஓ120 செ.மீ அளவுள்ள அவசர கால கதவு அமைக்கப்பட்டுள்ளது உட்பட அனைத்து அரசு விதிகளின் படி பள்ளி வாகனங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

மேலும்ஆய்வின்போது வாகனங்கள் பழுதடைந்துள்ளதை கண்டறிந்து அதை சரி செய்து மீண்டும் வாகனத்தை கொண்டு அனுமதி பெற்றுச் செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள வாகனங்கள் மே இறுதிக்குள் வாகனங்களை வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி ஆய்வுக்குட்படுத்தி வாகனங்கள் நல்ல முறையில் உள்ளதை உறுதி செய்துகொள்ள வேண்டும். பள்ளி வாகனங்களை பொறுத்த வரை வட்டார போக்குவரத்துத்துறையின் மூலம் ஆய்வு செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்ட வாகனங்கள் மட்டுமே பள்ளி பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும். அனுமதி பெறாத வாகனங்கள் பள்ளியின் பயன்பாட்டிற்கு பயன்படுத்துவது கண்டறிதல் செய்வதுடன்தமிழ்நாடு அரசு சட்ட விதிகளின்படி சம்மந்தப்பட்ட பள்ளி நிர்வாகத்தின் மீது சட்ட ரீதியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மே லும் ந டப் பாண்டு முதல் ஒவ்வொரு பள்ளி வாகனத்திலும் ஒரு பெண் உதவியாளர் கண்டிப்பாக நியமனம் செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல்வாகனத்தில் உள்ள கண்காணிப்பு கேமராக்களில் பதிவாகும் தினசரி பதிவுகளை வட்டார போக்குவரத்து அலுவலர்கள் மூலம் கண்காணிக்கப்படவுள்ளது. பள்ளி வாகன ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்கள் தினந்தோறும் கவனிக்க வேண்டிய பணிகளாக அவசர வழி கதவு சரியாக உள்ளதா என்பதை பார்த்து உறுதி செய்து கொள்ள வேண்டும். மாணவமாணவியர்களை பள்ளிக்கு ஏற்றிச் செல்லும் பொழுது இரண்டு பக்க கதவுகளும் சரியாக அடைக்கப்பட்டதா என்பதை உறுதி செய்திட வேண்டும். வாகனம் நின்றதும் பள்ளி குழந்தைகள் இறங்கி சென்றதை உறுதி செய்த பின் வாகனத்தை இயக்க வேண்டும். வானத்தில் உள்ள தீ தடுப்புக் கருவி சரியாக இயங்குகிறதா என்பதை அவ்வப்பொழுது பரிசோதித்து உறுதி செய்ய வேண்டும்.

குறிப்பாக வாகன ஓட்டுநர்கள் செல்போன் பேசிக் கொண்டே வாகனத்தை இயக்கக்கூடாது. அதேபோல் உதவியாளர்களும் வாகனத்துக்குள் குழந்தைகள் இருக்கையில் அமர்ந்த பின் வாகனத்தை இயக்க அனுமதிக்க வேண்டும். அதேபோல்வாகனத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள இருக்கையின் அளவிற்கு மட்டுமே குழந்தைகளை ஏற்றிச்செல்ல வேண்டும். பள்ளியிலிருந்து குழந்தைகள் வீட்டுக்குச் செல்லும் பொழுது சாலையை கடந்து குழந்தைகள் செல்லும் நிலை இருந்தால் பள்ளி வாகனத்தை நிறுத்தி உதவியாளர்கள் குழந்தைகளை பாதுகாப்பாக சாலையை கடந்து சென்ற பின் பள்ளி வாகனத்தை இயக்க வேண்டும். அதேபோல்பள்ளி வாகனங்களை திரும்பும் பொழுது பின்பக்கமாக வாகனம் வரும்பொழுது ஓட்டுநர் மற்றும் உதவியாளர் வாகனத்தின் பின்புறம் குழந்தைகள் இருக்கிறார்களா என்பதை பார்த்து பாதுகாப்பாக வாகனத்தை திருப்பி எடுத்துச் செல்ல வேண்டும்.

மேலும்பள்ளி நிர்வாகத்தினர் வாகனங்களை அவ்வப்பொழுது ஆய்வு செய்து வாகன ஓட்டுநர்கள்உதவியாளர்களுக்கு அவ்வப்பொழுது தக்க அறிவுரை வழங்கி பாதுகாப்பாக வாகனங்கள் இயக்க வலியுறுத்த வேண்டும். ஒவ்வொரு குழந்தையையும் பெற்றோர்கள் எத்தகைய அளவிற்கு நம்பிக்கையுடன் உங்கள் பள்ளிக்கு அனுப்புகிறார்களோஅந்த அளவிற்கு நம்பிக்கையுடன் பிள்ளைகளை நன்றாக பாதுகாப்புடன் பெற்றோர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அந்த அளவிற்கு பொறுப்புள்ள பணியே ஓட்டுநர் பணியாகும். அதற்கேற்ப ஓட்டுநர்களுக்கு நல்ல அறிவுரைகள் வழங்குவதுடன் அவர்களுக்கு தேவையான கண் பரிசோதனை மற்றும் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள அறிவுறுத்தி கண்காணித்து வர வேண்டும். விழுப்புரம் மாவட்டம்; எந்த விபத்தும் அல்லாத மாவட்டமாக அமைய உங்கள் பணி சிறப்பாக தொடர்ந்திட வேண்டும் என கலெக்டர் டாக்டர். சி.பழனி. தெரிவித்தார்.

தொடர்ந்துதீயணைப்புத்துறையின் சார்பில் தீ தடுப்பு தொடர்பான விளக்கவுரை மற்றும் செயற்முறை விளக்கத்தினை பார்வையிட்டார். மேலும் கண் மருத்துவமனையின் மூலம் வாகன ஓட்டுநர்களுக்கு கண் பரிசோதனை மற்றும் மருத்துவ முகாம் மற்றும் 108 ஆம்புலன்ஸ் பணியாளர்கள் மூலம் முதலுவதவி சிகிச்சை அளிப்பது தொடர்பாக செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த ஆய்வில்மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் தீபக் சிவாச்திண்டிவனம் சார் ஆட்சியர் திவ்யான்ஷு நிகம்விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் காஜா சாகுல் ஹமீதுதிண்டிவனம் காவல் துணை கண்காணிப்பாளர் சுரேஷ்குமார்மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அறிவழகன்விழுப்புரம் வட்டார போக்குவரத்து அலுவலர் வெங்கடேசன்வாகன ஆய்வாளர்கள் மாணிக்கம் கோவிந்தராஜ்சுந்தர்ராஜன்முருகவேல்மாவட்ட கல்வி அலுவலர் அலுவலர் (தனியார் பள்ளிகள்) சுப்புராயன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



விழுப்புரம் தொகுதி வாக்கு எண்ணும் மையமான விழுப்புரம் அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறைகளில் வைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் கண்காணிப்பு மையத்திலிருந்து கண்காணிப்பு கேமராக்கள் மூலம் கண்காணிக்கப்படுவதை கலெக்டர் சி.பழனி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தீபக் சிவாச், திண்டிவனம் சார் ஆட்சியர் திவ்யான்ஷு நிகம் உட்பட பலர் உள்ளனர்.

## ஆரணியில் அதிமுக சார்பில் 5 இடங்களில் தண்ணீர் பந்தல் திறப்பு



ஆரணி ஏப்26:

ஆரணியில் அதிமுக சார்பில் 5 இடங்களில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது.

ஆரணியில் அதிமுக சார்பில் 5 இடங்களில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது.

முன்னாள் அமைச்சர் சேவூர் எஸ்.இராமச்சந்திரன் எம் எல் ஏ, மாவட்ட செயலாளர் எல்.ஜெயசுதா லட்சுமிகாந்தன் ஆகியோர் தண்ணீர் பந்தல் களை திறந்து வைத்தனர்.

ஆரணி டவுனில் அண்ணா சிலை, எம்.ஜி.ஆர் சிலை, எஸ்.வி.நகரத்தில் பஸ் நிறுத்தம் அருகில், சேவூரில் பஸ் நிறுத்தம் அருகில், கண்ணமங்கலத்தில் பஸ் நிறுத்தம் அருகில் உள்ளிட்ட 5 இடங்களில் தண்ணீர் பந்தல் களை திறந்து வைத்து பொது மக்களுக்கு ஆரஞ்சு பழம், தர்பூசணி, ஐஸ்கிரீம், மோர், கீரைக்காய், குளிர்பானங்கள், இளநீர், உள்ளிட்டவைகள் பொதுமக்களுக்கு வழங்கினர்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் அ.கோவிந்தராசன், ஒன்றிய செயலாளர்கள் ஜெயப்பிரகாஷ், வக்கீல் க.சங்கர், ஜி.வி.கஜேந்திரன், ப.திருமால், மாவட்ட பேரவை செயலாளர் பாரி பி.பாபு, மாவட்ட பொருளாளர் எம்.வேலு, கண்ணமங்கலம் பேரூராட்சி செயலாளர் பாண்டியன், எம்.ஜி.ஆர். இளைஞரணி மாவட்ட செயலாளர் ஏ.ஜி.ஆனந்தன், அவைத்தலைவர் சேவூர் சம்பத், சேவூர் முன்னாள் தலைவர் வெங்கடேசன், எஸ்.வி.நகரம் முன்னாள் தலைவர் என்.வாசு, சுப்பாராவ் பேட்டை வேலன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### பரமேஸ்வரமங்களம் கிராமத்தில்

## செல்அறக்கட்டளை சார்பில் 30 இருளருக்கு 15கிலோ அரிசி



அரக்கோணம் ஏப்.26

இ ரா ணிப் பேட்டை மாவட்டம், அரக்கோணம் அடுத்த பரமேஸ்வரமங்கலம் கிராமத்தில் மாணவர்கள் கல்வி மற்றும் ஆய்வு நிறுவு அறக்கட்டளை (செல்ப்) காப்பாளர் டாக்டர் ஜெயராஜ்- சுபாஷினி குடும்பத்தினர் தங்கள் நிலத்தில் விளைந்த நெல் அரிசியை இந்த கிராம பழங்குடி இருளர் இன 30 குடும்பங்களுக்கு தலா 15 கிலோ வழங்கினர்.


இந்த நிகழ்ச்சிக்கு செல்ப் அறக்கட்டளை செயலாளர் கோவி.பார்த்திபன் தலைமை வகித்தார். பழங்குடி இருளர் சத்யா வரவேற்றார்.

செல்ப் அறக்கட்டளை தன்னார்வலர்கள் பி.கலைச்செல்வன், எஸ்.அற்புதராஜ், இ.யோகேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செல்ப் அறக்கட்டளை பொறுப்பாளர்கள் ஆர்.நம்மாழ்வார், க.கௌதம், பி.ஜேம்ஸ், ஐ.டி.தேவாசீர்வாதம் ஆகியோர் சிறப்பு அழைப் பா ளர் க ளாக கலந்து கொண்டு , நம்மை உயர்த்தும் ஒரே ஆயுதம், கல்வி எனவே அதன் அவசியத்தை கருதி குழந்தைகளை பள்ளிக் கூடத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். கல்விக்கான அனைத்து உதவிகளையும் செல்ப் அறக்கட்டளை செய்யும் எனவும் விளக்கிப் பேசினர்.மேலும் டாக்டர் ஜெயராஜ் சூம் செயலி மூலம். ஒவ்வொரு குடிசைகளை பார்வையிட்டு, மனிதன் வாழ எவ்வித சாத்தியக் கூறும் இல்லாமல் இருக்கும் நிலை கண்டு வேதனையடைந்தார். ஆகஸ்ட் மாதம் வந்து உதவி செய்வதாகவும் கூறினார். இதனையடுத்து இருளர் மக்கள் செல்ப் அறக்கட்டளை நடத்தும் காப்பாளர்கள் ச.வேலாயுதம், வெ.பாலாஜி, பொருளாளர் ச.கருணாகரன் மற்றும் பொறுப்பாளர்களுக்கும் நன்றி கூறினர்.

**வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்**

# சென்னை அடையாறு இந்திரா நகர் முதல் பிரதான சாலைக்கு கல்விபேரொளி அரங்கநாயகம் சாலை என பெயர் சூட்ட வேண்டும்

## இந்திய நாடார்கள் பேரமைப்பு முதல்வருக்கு கோரிக்கை



**சென்னை ஏப் 26-**

சென்னை வில்லிவாக்கத்தில் உள்ள இந்திய நாடார்கள் பேரமைப்பின் தலைமை அலுவலகத்தில் முன்னாள் கல்வி அமைச்சர், செ. அரங்கநாயகம் 93 ஆம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு

பேரமைப்பின் தலைவர் ராகம் சௌந்தரபாண்டியன் தலைமையில் அன்னாரது திரு வு ரு வப் ப டத் திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

இந்திய நாடார்கள் பேரமைப்பு ஏற்கனவே தமிழக முதல்வர் . மு.க. ஸ்டாலினுக்கு வைத்திருந்த கோரிக்கையான கல்விபேரொளி செ. அரங்கநாயகம் வாழ்ந்து மறைந்த இல்லம் அமைந்திருக்கும் சென்னை அடையாறு இந்திரா நகர் முதல் பிரதான சாலைக்கு "கல்விபேரொளி அரங்கநாயகம் சாலை " என பெயரிட வேண்டும் என்கிற கோரிக்கையை அரசு நிறைவேற்றித் தர வேண்டும் என திரும்பவும் வலியுறுத்துவதாக பேரமைப்பின் தலைவர் ராகம் சௌந்தரப்பாண்டியன் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் பேரமைப்பின் பொதுச் செயலாளர் கே எஸ் மலர் மன்னன், பொருளாளர் ஏ எம் டி சிவக்குமார், கௌரவ ஆலோசகர் எஸ் டி பன்னீர்செல்வம், வியாபாரிகள் முன்னேற்ற அணி தலைவர் மாதவன், தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் ரமேஷ், திருவள்ளூர் மாவட்டத் தலைவர் சேரன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வெங்கட்ராமன், பழனி, சங்கர் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



**திருவொற்றியூர் மற்றும் குரோம்பேட்டை பகுதியில் செயல்பட்டு வரும் சுகம் மருத்துவமனைகளுக்கு கென்யா, கானா, டோகோ ஆகிய நாடுகளில் இருந்து மேல் சிகிச்சைகளுக்காக சென்னை சுகம் மருத்துவ மனைகளுக்கு நோயாளிகளை அனுப்ப மருத்துவமனைகளின் கட்டமைப்பு வசதிகளை அந்தநாட்டு பிரதிநிதிகள் பார்வையிட்டனர். உடன் சுகம் மருத்துவமனைகளின் தலைமை நிர்வாக இயக்குநர் டாக்டர் டி.பி.டி.சத்திய குமார் உடனிருந்தார்.**

# சோழவரம் வட்டாரத்தில் பச்சைப்பயறில் களைக்கொல்லி மருந்துகளை தவிர்க்க வேளாண்மை உதவி இயக்குனர் வேண்டுகோள்

**திருவள்ளூர்,ஏப்,26.**

திருவள்ளூர் மாவட்டம் சோழவரம் வட்டாரத்தில் உள்ள கிராமங்களில் நடப்பு ராபி பருவத்தில் 1791 ஹெக்டேர் பச்சைப்பயறு சாகுபடி செய்யப்பட்டு அறுவடை நடைபெற்று வருகிறது,

**வேண்டுகோள்**

இந்நிலையில் விவசாயப் பெருமக்கள் எளிதில் அறுவடை செய்வதற்கு ஏதுவாக பச்சைப்பயறு அறுவடைக்கு முன்பு கிளைப்போசேட் (Gly phosate) என்ற களைக்கொல்லி மருந்தினை தங்கள் வயலில் தெளித்து இரண்டு மூன்று தினங்களிலேயே அறுவடை செய்து வருவது வேளாண் களப்பணியாளர்களின் வயல் ஆய்வில் தெரியவந்துள்ளது.எனவே உணவு தானிய பயிர்களில் அறுவடை நேரத்தில் களைக்கொல்லிகளை பயன்படுத்தும்போது விளைபொருளில் நச்சுத்தன்மையால் பக்க விளைவுகள் உருவாக அதிக வாய்ப்பு உள்ளதால் இது மாதிரியான நடைமுறையை முற்றிலும் தவிர்க்க வேண்டும் என்று வேளாண்மை உதவி இயக்குனர் எஸ். ரமேஷ் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் உணவு பாதுகாப்பு விதிமுறைகளின் கீழ் நச்சுத்தன்மை கொண்ட உணவு தானிய விளைபொருட்கள் விற்பனை செய்வதற்கு தடை விதிக்க வாய்ப்புள்ளது.எனவே பச்சைப்பயறு காய் முதிர்ச்சியைப் பொறுத்து இரண்டு அல்லது மூன்று தவணைகளில் பச்சைப்பயறு அறுவடை செய்து நன்கு உலர்த்துமாறு கேட்டு கொள்ளப்படுகிறது. மேலும் சோழவரம் வட்டார சில்லறை பூச்சிமருந்து விற்பனையாளர்களிடமும் பயிர் அறுவடை சமயங்களில் விவசாயிகளுக்கு களைக்கொல்லி மருந்துகளை விநியோகிக்க வேண்டாம் எனவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

சோழவரம் வட்டார விவசாய பெருமக்கள் விவசாயம் சார்ந்த சந்தேகங்களுக்கு தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குனர் ஆகியோரை தொடர்புகொண்டு உரிய ஆலோசனை பெற்றுக் கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மயிலாடுதுறை மாவட்டத்தில்

# தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைமை நீரேற்று நிலையத்தில் கலெக்டர் ஏ.பி.மகாபாரதி ஆய்வு



**மயிலாடுதுறை. ஏப்.26.**

மயிலாடுதுறை மாவட்டம் சீப்புலியூர் கிராமத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் தலைமை நீரேற்றும் நிலையத்தின் செயல்பாடுகளை மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

மயிலாடுதுறை வட்டம் சீப்புலியூர் கிராமத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் தலைமை நீரேற்றும் நிலையத்தின் செயல்பாடுகளை மாவட்ட கலெக்டர் .ஏ.பி.மகாபாரதி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.இக்கூட்டுக் குடிநீர் திட்டத்தில் 10.80 திறன் கொண்ட டர்பைன் மின் மோட்டார்கள் மூலம் நீர் ஏற்றப்பட்டு, 450 அஅ முதல் 50 அஅ வரை விட்டமுள்ள பிரதான நீரேற்று குழாய் மற்றும் கிளை நீரேற்று குழாய் மூலம் மேற்கண்ட 610 குடியிருப்புகளில் உள்ள மேல் நிலை நீர் தேக்கத் தொட்டிகளின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலமாக சுமார் 3,39,023 மக்கள் பயனடைந்து வருகின்றனர்.

முன்னதாக, மயிலாடுதுறை வட்டம் கடலங்குடி கிராமத்தில் தெற்கு ராஜன் வாய்க்கால் குறுக்கே கட்டப்பட்டு வரும் பாலத்தின் கட்டுமான பணிகளின்போது சேதமடைந்த கொள்ளிடம் கூட்டு குடிநீர்த்திட்ட குழாய்கள் சீரமைக்கப்பட்டு வருவதை மாவட்ட கலெக்டர்.ஏ.பி.மகாபாரதி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இவ்வாய்வின்போது, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) .முபீர் ஆலம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் செயற்பொறியாளர் ரவிசந்திரன் அவர்கள்,உதவி செயற்பொறியாளர் விஜயராகவன் அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் செந்தில்குமார்,உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சந்தானம் ஆகியோர் உடன் இருந்தனர்.

# கம்போடியா நாட்டில் இருந்து சென்னை விமானத்தில் கடத்தி வந்த ரூ.35 கோடி போதைப்பொருள் பறிமுதல்

**சென்னை ஏப் 26-**

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் இருந்து, சென்னை சர்வதேச விமான நிலையத்திற்கு நேற்று காலை ஏர் ஏசியா பயணிகள் விமானம் ஒன்று வந்தது.

அதில் வந்த பயணிகளை, சென்னை விமான நிலைய சுங்க அதிகாரிகள் பரிசோதித்தனர். அப்போது அந்த விமானத்தில் கம்போடியா நாட்டிலிருந்து மலேசியா வழியாக வந்த ஒரு பயணி மீது, மத்திய வருவாய் புலனாய்வுத்துறை அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது. எனவே அந்த பயணியை நிறுத்தி விசாரித்தனர்.

அவர் முன்னுக்குப்பின் முரணாக பேசினார். மேலும் அந்தப் பயணி கம்போடியா நாட்டிலிருந்து, மலேசியா வழியாக சென்னைக்கு வந்துள்ளதால், மத்திய வருவாய் புலனாய்வு துறை அதிகாரிகளுக்கு, சந்தேகம் அதிகமானது.இதை அடுத்து அவருடைய உடைமைகளை மத்திய வருவாய் புலனாய்வு அதிகாரிகள் சோதனை நடத்திய போது, அவருடைய பைக்குள் மறைத்து வைத்திருந்த பார்சலை கண்டுபிடித்தனர்.

அந்தப் பார்சலை அதிகாரிகள் பிரித்துப் பார்த்த போது, அதனுள் 3.5 கிலோ கொகைன் போதைப் பொருள் இருந்தது. அதன் சர்வதேச மதிப்பு சுமார் ரூ.35 கோடி என்று கணக்கிடப்பட்டது. இதை அடுத்து அதிர்ச்சி அடைந்த மத்திய வருவாய் புலனாய்வு அதிகாரிகள், அந்த பயணியை வெளியில் விடாமல், தனி அறையில் வைத்து விசாரித்தனர்.

இந்த போதை பொருளை யாரிடம் கொடுப்பதற்காக இந்தப் பயணி கடத்தி வந்தார்? சென்னைக்கு கடத்தி வரப்பட்ட காரணம் என்ன? இந்த போதைப் பொருள் கடத்தல் பயணியின், பின்னணியில் இருப்பவர்கள் யார்? என்று பல்வேறு கோணங்களில் விசாரணைகள் நடைபெற்று வருகிறது.

இந்த கடத்தல் பயணி எந்த நாட்டைச் சேர்ந்தவர்? அவருடைய பெயர் போன்ற விவரங்களை அதிகாரிகள் வெளியிட மறுத்து விட்டனர். ஆனால் இந்தப் பயணி சர்வதேச போதைப் பொருள் கடத்தும் கும்பலைச் சேர்ந்தவர் என்று தெரிய வருகிறது. இப்போது விசாரணை நடந்து கொண்டு இருப்பதால், இதுகுறித்து மேலும் எந்த தகவலும் வெளியிட முடியாது என்று அதிகாரிகள் தரப்பில் கூறப்படுகிறது.நேற்றைய தினம் அதிகாலை சென்னை விமான நிலையத்தில் ரூ.28 கோடி மதிப்புடைய கொகைன் போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்ட நிலையில், இன்று மேலும் ரூ.35 கோடி மதிப்புடைய, போதைப் பொருள், சென்னை விமான நிலையத்தில் பறிமுதல் செய்யப்பட்டது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. சென்னை விமான நிலையம் போதை பொருள் கடத்தும் மையமாக மாறி வருவது, பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இரண்டு நாட்களில் ரூ.63 கோடி போதை பொருள் கடத்திவரப்பட்டது குறிப்பிடத்தக்கது

# தேர்தலில் சிறப்பாக பணியாற்றிய 87 பேருக்கு போலீஸ் கமிஷ்னர் சந்தீப் ராய் ரத்தோர் பாராட்டு

**சென்னை ஏப் 26-**

சென்னை பெருநகர காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர், காவல் ஆணையரக தேர்தல் பிரிவில் சிறப்பாக பணிபுரிந்த 5 காவல் துணை ஆணையாளர்கள் உட்பட 87 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களை நேரில் அழைத்து சான்றிதழ்கள் வழங்கி பாராட்டினார். சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.சந்திப் ராய் ரத்தோர், இ.கா.ப. அவர்கள் சிறப்பாக பணிபுரிந்து வரும் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களை ஊக்குவிக்கும் விதமாக அவர்களை நேரில் அழைத்து பாராட்டி வெகுமதி மற்றும் சான்றிதழ்கள் வழங்கி அவர்களது சிறந்த சேவையை பாராட்டி வருகிறார்.இதன் தொடர்ச்சியாக, சமீபத்தில் நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலையொட்டி, கடந்த பிப்ரவரி மாதம் முதல் சென்னை பெருநகர காவல் ஆணையரகத்தில் சென்னை பெருநகர காவல் தேர்தல் பிரிவு, துவங்கப்பட்டு, 24 மணி நேரமும் சுழற்சி முறையில் செயல்பட்டது. இப்பிரிவில் காவல் துணை ஆணையாளர் தலைமையில், கூடுதல் துணை ஆணையாளர், உதவி ஆணையாளர்கள், காவல் ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள், காவல் ஆளிநர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்துள்ளனர். இதன் காரணமாக 19.ந் தேதி அன்று சென்னை பெருநகர காவல் எல்லைக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்கள் உட்பட சென்னை பெருநகர் முழுவதும் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள், சிறப்பு பாதுகாப்பு பிரிவினர் நியமனம் செய்யப்பட்டு, சிறப்பாக பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு அமைதியான முறையில் பாராளுமன்ற தேர்தல் நடைபெற்றது. சென்னை பெருநகர காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர்,

காவல் ஆணையரகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சென்னை பெருநகர காவல், தேர்தல் பிரிவில் சிறப்பாக பணிபுரிந்த 5 துணை ஆணையர்கள் கே.அதிவீரபாண்டியன் (நிர்வாகம்), டி.ரமேஷ்பாபு (நவீன கட்டுப்பாட்டறை), ஜெ.ஜெயகரன் (ஆயுதப்படை-1), எஸ்.அன்வர் பாஷா, (ஆயுதப்படை-2), எம்.ராதாகிருஷ்ணன் (மோட்டார் வாகனப்பிரிவு), கூடுதல் காவல் துணை ஆணையர் குமரகுருபரன், 5 உதவி ஆணையர்கள், 12 இன்ஸ்பெக்டர்கள், 23 உதவி ஆய்வாளர்கள், 4 சிறப்பு உதவி ஆய்வாளர்கள், 29 காவலர்கள் , 8 அமைச்சுப் பணியாளர்கள் என மொத்தம் 87 உயர் அதிகாரிகள்,மற்றும் போலிசார் மற்றும் அமைச்சுப் பணியாளர்களை நேரில் அழைத்து சான்றிதழ்கள் வழங்கி பாராட்டினார். இந்நிகழ்ச்சியில் கூடுதல் ஆணையர் கபில்குமார் சி.சரட்கர், இணை ஆணையர் ஏ.கயல்விழி, உடனிருந்தனர்.

# புழல் சிறையில் பரபரப்பு காவலருக்கு பெண் கைதி கொலை மிரட்டல்: திருநங்கைகள் அடிதடி

**சென்னை ஏப் 26-**

புழல் பெண்கள் சிறையில் திரிபுராவை சேர்ந்த சலீமா கத்தல் (40) போதைப் பொருள் கடத்தல் வழக்கில் கடந்த ஆகஸ்ட் 9ம் தேதி அடைக்கப்பட்டார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை சிறைக் காவலர் சசிகலா கைதிகள் தங்கும் அறைகளை ஒவ்வொன்றாக பார்வையிட்டு கதவை பூட்டிக் கொண்டிருந்தார். அப்போது, ஒரு அறையில் அடைக்கப்பட்டிருந்த சலீமா கத்தல், கதவை மூட வேண்டாம், என்று கூறி காவலர் சசிகலாவிடம் வாக்குவாதம் செய்து தகராறில் ஈடுபட்டார். மேலும், சிறைக் காவலர் சசிகலாவின் சீருடையை பிடித்து கீழே தள்ளி கொன்றுவிடுவேன் என மிரட்டினார். உடனே சக பெண் காவலர்கள் சலீமா கத்தலை சிறை அறைக்கு அழைத்துச் சென்று கதவைப் பூட்டினர்.

இதுதொடர்பாக, பெண்கள் சிறை துணை ஜெயிலர் அனுராதா, புழல் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் கொலை மிரட்டல் உள்ளிட்ட 3 பிரிவுகளில் வழக்கு பதிந்து சலீமா கத்தலிடம் விசாரிக்கின்றனர். வியாசர்பாடி பகுதியைச் சேர்ந்தவர் ஸ்ரீபா (21). எருக்கஞ்சேரி பகுதியைச் சேர்ந்தவர் அகல்யா (25). திருநங்கைகளான இருவரும் கொடுங்கையூர் பகுதியில் மதுபானம் விற்றது தொடர்பாக கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டனர். இந்நிலையில், ஸ்ரீபா மற்றும் அகல்யா ஆகியோருக்கும் பக்கத்து சிறை அறையில் அடைக்கப்பட்டுள்ள வண்ணாரப்பேட்டை பகுதியைச் சேர்ந்த லட்சுமி (50) என்பவருக்கும் இடையே நேற்று முன்தினம் தகராறு ஏற்பட்டுள்ளது.

அப்போது, அவதூறாக பேசிய லட்சுமியை திருநங்கைகள் பா, அகல்யா ஆகியோர் சரமாரியாக தாக்கி உள்ளனர். இதில், படுகாயமடைந்த லட்சுமியை போலீசார் மீட்டு சிறை மருத்துவமனையில் சேர்த்தனர். புகாரின்படி, போலீசார் இருவரிடமும் விசாரித்து வருகின்றனர்

# மக்களை பிளவுபடுத்தும் வகையில் பேசிய பிரதமர் மோடியை தேர்தல் ஆணையம் தகுதி நீக்கம் செய்ய வேண்டும்

## ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ பேட்டி

கும்பகோணம். ஏப் 26

மக்களை பிளவுபடுத்தும் வகையில் பேசிய பிரதமர் மோடியை தேர்தல் ஆணையம் தகுதி நீக்கம் செய்து தேர்தலில் போட்டியிட தடை விதிக்க வேண்டும் என மனிதநேய மக்கள் கட்சியின் மாநில தலைவர் ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ராஜஸ்தான் மாநிலத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, தனது பொறுப்பு மிக்க பதவியின் கண்ணியத்தையும் சிறப்பையும் சீர்குலைக்கும் வகையில் நஞ்சைக் கக்கி இருக்கிறார். அவர்கள் (காங்கிரஸ்) ஆட்சியில் இருந்தபோது, தேசத்தின் செல்வத்தில் முஸ்லிம்களுக்கு முதல் உரிமை உண்டு என்று சொன்னார்கள். இதன் பொருள் அவர்கள் இந்தச் செல்வத்தை அதிக குழந்தைகளைப் பெற்றவர்களுக்கும், ஊடுருவல்காரர்களுக்கும் பகிர்ந்தளிப்பார்கள்.

நீங்கள் கஷ்டப்பட்டுச் சம்பாதித்ததை ஊடுருவியவர்களுக்குத் தரப் போகிறீர்களா... மன்மோகன் சிங் தலைமையிலான அரசு, முஸ்லிம்களுக்குச்செல்வத்தில் முதல் உரிமை உண்டு என்று கூறியது. இந்த நகர்ப்புற நக்சல் சிந்தனை என் தாய்மார்கள் மற்றும் சகோதரிகளின் மாங்கல்யத்தைக் கூடவிட்டுவைக்காது என்றெல்லாம் கேடுகெட்ட ஒரு மூன்றாம் தரப் பேச்சாளரைப் போல ஒரு நாட்டின் பிரதமர் பேசியிருப்பது இந்திய நாட்டையே உலக அரங்கில் வெட்கித் தலைகுனிய வைத்துள்ளது. இதுவரை இந்தியாவில் ஆட்சி செய்த பிரதமர்கள் யாருமே இது போன்ற தரங்கெட்ட செயல்பாடுகளில் ஈடுபட்டதில்லை. மக்களை பிளவுபடுத்தும் வகையில் பேசிய பிரதமர் மோடியை தேர்தல் ஆணையம் தகுதி நீக்கம் செய்ய வேண்டும். அவருடைய பரப்புரைக்கு தடை விதிக்க வேண்டும். இனி அவர் தேர்தலில் போட்டியிடாத வகையில் தடை விதிக்க வேண்டும் ,

பாராளுமன்ற தேர்தல் தமிழகத்தில் நடந்து முடிந்துள்ளது.எனவே தொகுதி மக்களின் தேவைகளை பூர்த்தி அடைய கடந்த 45 நாட்களாக சட்டமன்ற அலுவலகம் சீல் வைக்கப்பட்டதை அகற்ற வேண்டும். என மனித நேய மக்கள் கட்சியின் மாநில தலைவர் ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்

# திரைப்பட தயாரிப்பாளர் வீட்டு பணிப்பெண் தற்கொலை முயற்சி

**சென்னை ஏப் 26-**

திரைப்பட தயாரிப்பாளர் ஞானவேல் ராஜா வீட்டில் கடந்த மாதம் தங்க நகைகள் திருடுபோனது.

இதையடுத்து, மனைவிக்கு தந்த தங்க பரிசு பொருட்கள் காணாமல் போனதாக மாம்பலம் காவல் நிலையத்தில் ஞானவேல் ராஜா புகார் அளித்திருந்தார்.

புகாரின் பேரில் பணிப்பெண் லட்சுமியிடம் போலீசார் விசாரணை நடத்தினர்.அப்போது, நகைகளை திருடவில்லை என பணிப்பெண் சொன்னதாகவும், விசாரணைக்கு நேற்று (இன்று) வருமாறு போலீசார் எழுதி வாங்கிக் கொண்டு அனுப்பியதாகவும் கூறப்படுகிறது.இந்நிலையில், மன உளைச்சலில் இருந்து பணிப்பெண் அரளி விதையை அரைத்து குடித்து தற்கொலைக்கு முயன்றுள்ளார்.இதைகண்ட அவரது குடும்பத்தினர், பணிப்பெண்ணை உடனடியாக மீட்கப்பட்ட நிலையில், ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்

# செல்போன் கடையை உடைத்து கொள்ளையடிக்க முயன்றவர் கைது

**சென்னை ஏப் 26-**

கோயம்பேடு சந்தையில் உள்ள செல்போன் கடையை உடைத்து கொள்ளையடிக்க முயன்ற பாண்டியராஜன் என்பவர் கைது செய்யபட்டுள்ளார். செல்போன் கடையில் திருட முயன்ற பாண்டியராஜனை சுமை தூக்கும் தொழிலாளர்கள் பிடித்து போலீசில் ஒப்படைத்தனர்.

# ரியல் எஸ்டேட் அதிபர் கொலை வழக்கில் மேலும் ஒருவர் கைது

**சென்னை ஏப் 26-**

வேளச்சேரியில் கடந்த மார்ச் 29-ம் தேதி ரியல் எஸ்டேட் அதிபர் பழனிச்சாமி கொலை வழக்கில் மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டார். பழனிச்சாமி வெட்டி கொல்லப்பட்ட வழக்கில் ஏற்கெனவே 8 பேர் கைது செய்யப்பட்ட நிலையில் செந்தில்குமார் என்பவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

# புதுக்கோட்டை புஷ்கரம் வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவிகள் களப்பயணம் துவக்க விழா



திருச்சி ஏப் 26

புதுக்கோட்டை மாவட்டம் புஷ்கரம் வேளாண்மை அறிவியல் கல்லூரி நான்காம் ஆண்டு மாணவிகள் வேளாண் பயிற்சி முகாமின் துவக்க விழா சமுத்திரம் ஊராட்சி மன்ற வளாகத்தில் நடைபெற்றது. ஊராட்சி மன்ற தலைவர் எம். கண்ணன், விஏஓ வெங்கடேசன், உதவி வேளாண்மை இயக்குனர் பாண்டி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

முகாமில் கல்லூரி பேராசிரியர்கள் ஆனந்த நம்பி, திருமால் கண்ணன் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் பிஆர்ஏ டெக்னிக் என்னும் வரைபடம் வாயிலாக குரு சிறு பெரு விவசாயிகள் வாழ்வாதாரத்தை மாணவிகள் வெளிப்படுத்தினர்.

மேலும் காய்கறிகள் பழங்கள் தோலின் மதிப்பீட்டு கூட்டு உணவு பொருட்களை தயாரித்து மக்களுக்கு வழங்கினர். முகாமின் நிறைவாக ஊராட்சி மன்ற தலைவருக்கு கல்லூரி மாணவிகள் மரக்கன்று பரிசாக வழங்கினர்.

முகாமில் கல்லூரி மாணவிகள் க.திவ்ய தர்ஷினி,க. ஜோஷ்ன பிரியா, ஜே.குருதர்ஷினி, பொ.ஹரிணி, செ.ஹரிணி, நா.ஹரிணிஸ்ரீ, ஆ.ஹரிதா, ம.இந்துமுகி,ப.ஜனனி, சி.சு. ஜஸ்ரா ஷிரின், பா.ஜீவதர்ஷ்னி உள்ளிட்ட மாணவிகள் பங்கேற்றனர்

# சென்னையில் 1.3 கிலோ கஞ்சா பறிமுதல்: இருவர் கைது

**சென்னை ஏப் 26-**

சூளைமேடு பகுதியில் உள்ள பெண்கள் விடுதியில் போதைப்பொருள் விற்கப்படுவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

சென்னை உள்பட தமிழகம் முழுவதும் அவ்வப்போது கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்களை போலீசார் பறிமுதல் செய்து வருகின்றனர். இது குறித்து கைது நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.இந்நிலையில் சென்னை சூளைமேடு பகுதியில் உள்ள பெண்கள் விடுதியில், போதைப்பொருள் விற்கப்படுவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் வந்த நிலையில் காவல்துறையினர் அதிரடியாக அந்த விடுதி அறையில் சோதனை செய்தனர். அப்போது அங்கிருந்த 1.3 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.இது தொடர்பாக அந்த அறையில் வசித்த இளம்பெண்ணிடம் விசாரித்தபோது, புதுக்கோட்டையை சேர்ந்த ஷர்மிளா என்பதும், பட்டதாரி பெண்ணான அவர், ஓஎம்ஆர் பகுதியில் உள்ள ஐ.டி. நிறுவனத்தில் பணியாற்றி வருவதும் தெரியவந்தது. நண்பரும், கால் டாக்சி ஓட்டுநருமான சுரேஷ் என்பவர் கஞ்சாவை கொடுத்ததாகக் கூற, சுரேஷை கைது செய்து போலீசார் விசாரணை நடத்தினர்.அதில், கால் டாக்சி ஓட்டுநர் என்ற போர்வையில், வெளிமாநிலங்களில் இருந்து வரும் கஞ்சாவை, சம்பந்தப்பட்ட நபர்களிடம் ஒப்படைக்கும் வேலையை சுரேஷ் செய்து வந்தது விசாரணையில் உறுதியானது. இதனைத் தொடர்ந்து, பெண் ஐ.டி. ஊழியர் ஷர்மிளா மற்றும் சுரேஷை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# சென்னையில் 7 மண்டலங்களில் 2 நாட்கள் குடிநீர் வினியோகம் நிறுத்தம்

**சென்னை ஏப் 26-**

சென்னை குடிநீர் வாரியம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:- சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் சார்பில், மவுண்ட் பூந்தமல்லி சாலையில் (போரூர் சந்திப்பு) குடிநீர் பிரதான குழாய் மாற்றி அமைக்கும் பணிகள் மேற்கொள்ளபட உள்ளது. இதன் காரணமாக, சென்னையில் 7 மண்டலங்களில் குழாய் மூலம் வழங்கப்படும் குடிநீர் வினியோகம் நேற்று (வியாழக்கிழமை) முதக் இரவு 9 மணி முதல் வருகிற 27-ந்தேதி இரவு 9 மணி வரை 2 நாட்கள் நிறுத்தப்படுகிறது.

அதன்படி, அம்பத்தூர் மண்டலத்தில் அத்திப்பட்டு, பாடி, பார்க்ரோடு, டி.எஸ்.கிருஷ்ணா நகர், முகப்பேர் மேற்கு, முகப்பேர் கிழக்கு, அண்ணாநகர் மண்டலத்தை பொறுத்தவரையில் அரும்பாக்கம், அமைந்தகரை, சூளைமேடு ஆகிய பகுதிகளில் குடிநீர் வினியோகம் நிறுத்தப்படும்.

தின பூமி நாளிதழ் படியுங்கள்

## ரஞ்சிக் கோப்பை வீரர்களுக்கு
# ரூ.1 கோடி வரை சம்பளத்தை உயர்த்த பி.சி.சி.ஐ. பரிசீலனை



**மும்பை, ஏப். 26-**

ரஞ்சிக் கோப்பை போட்டிகளில் வீரர்கள் விளையாடுவதை ஊக்கப்படுத்தும் விதமாக, வருடாந்திர ஊதியத்தை ஒரு கோடி ரூபாய் வரை உயர்த்த பி.சி.சி.ஐ. முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

**பங்கேற்க அறிவுறுத்தல்...**

இந்தியா கிரிக்கெட் அணியில் விளையாடி வரும் வீரர்கள், அணியில் வாய்ப்பில்லாத போதும், ஓய்வின் போதும் ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்க வேண்டும் என சமீபத்தில் பி.சி.சி.ஐ. அறிவித்திருந்தது. உள்ளூரில் விளையாடப்படும் இந்த தொடரில் பங்கேற்கும் வீரர்கள் உடல் தகுதியை நிரூபிப்பதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் விளையாடுவதற்கான வாய்ப்புகள் உருவாகிறது.

**ஊதியம் இல்லாததே...**

ஆனால் முக்கிய வீரர்கள் ரஞ்சிக் கோப்பைப் போட்டிகளில் விளையாடுவதைத் தவிர்ப்பதிலேயே குறியாக இருப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந்நிலையில் இது தொடர்பாக பி.சி.சி.ஐ. ஆய்வு செய்த போது, போதிய அளவு ஊதியம் இல்லாததே ரஞ்சிக் கோப்பை போட்டிகளில் விளையாடுவதற்கு வீரர்கள் ஆர்வம் காட்டாமல் இருப்பதாக தகவல் வெளியானது.

**இரண்டு மடங்கு...**

இதையடுத்து 'டெஸ்ட் கிரிக்கெட் ஊக்கத்தொகை திட்டம்' என்ற திட்டத்தை பி.சி.சி.ஐ. கடந்த மாதம் அறிவித்தது. இதன்படி ரஞ்சிக் கோப்பையில் விளையாடினால் வீரர்கள் தற்போது வாங்கி வரும் ஊதியத்தை காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாக ஊதியம் பெற முடியும் என கூறப்படுகிறது. வருடத்திற்கு ரூ.75 லட்சம் முதல் ஒரு கோடி ரூபாய் வரை அவர்கள் விளையாடும் ரஞ்சிக் கோப்பை போட்டிகளைப் பொறுத்து ஊதியம் வேறுபடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு வருடத்தில் 40 ரஞ்சிக் கோப்பை போட்டிகளில் விளையாடினால் 60 ஆயிரம் ரூபாயும், 20 முதல் 40 ரஞ்சிக்கோப்பை போட்டிகளின் விளையாடினால் 50 ஆயிரம் ரூபாயும், 20 ரஞ்சிக்கோப்பை போட்டிகளுக்கும் குறைவாக விளையாடுபவர்களுக்கு நாளொன்றுக்கு 40 ஆயிரம் ரூபாயும் ஊதியமாக நிர்ணயிக்கப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.

# உலக சாம்பியன்ஷிப்பிலும் நிச்சயம் வெற்றி பெறுவேன்
## கிராண்ட் மாஸ்டர் குகேஷ் நம்பிக்கை

**சென்னை, ஏப். 26-**

கனடாவில் நடைபெற்ற கேண்டிடேட்ஸ் செஸ் போட்டியில் சாதனை படைத்த குகேஷுக்கு சென்னையில் அமோக வரவேற்பளிக்கப்பட்ட நிலையில், உலக சாம்பியன்ஷிப்பிலும் தான் வெற்றி பெற முடியும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

**சாம்பியன் பட்டம்...**

கனடாவின் டொரோன்டோ நகரில் நடந்த ஃபிடே கேண்டிடேட்ஸ் செஸ் போட்டியில் 14 சுற்றுகள் முடிவில் இந்திய வீரரான தமிழகத்தைச் சேர்ந்த குகேஷ் 9 புள்ளிகளுடன் சாம்பியன் பட்டத்தை பெற்றார். இதன்மூலம் கேண்டிடேட்ஸ் தொடரில் சாம்பியன் பட்டம் வெற்ற இளம் வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார். மேலும், கேண்டிடேட்ஸ் தொடரை வென்றதன் மூலம் உலக சாம்பியனான சீனாவின் டிங் லிரெனுக்கு எதிராக மோதும் தகுதியை பெற்றுள்ளார் குகேஷ்.

**மிகவும் மகிழ்ச்சி...**

இந்நிலையில், குகேஷ் நேற்று சென்னை வந்தடைந்தார். அதிகாலை 3 மணிக்கு வந்த குகேஷை வரவேற்க ஏராளமானோர் விமான நிலையத்தில் காத்திருந்தனர். அவரை வரவேற்க அவர் படித்த வேலம்மாள் வித்யாலயா பள்ளியில் இருந்து 100க்கும் மேற்பட்ட மாணவர்கள் வந்திருந்தனர். அப்போது பேசிய குகேஷ், "நான் சொந்த மண்ணுக்கு வந்தடைந்தது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இது சிறப்பான சாதனை. தொடரின் தொடக்கத்தில் இருந்து நான் மிகவும் நம்பிக்கையுடன் இருந்தேன். அதிர்ஷ்டமும் எனக்கு சாதகமாக இருந்தது. தற்போது பலரும் செஸ் போட்டியினை கொண்டாடுவதைப் பார்க்க நெகிழ்ச்சியாக இருக்கிறது.

**தமிழக அரசு நன்றி...**

தமிழக அரசு, எனது அப்பா, அம்மா, பயிற்சியாளர், நண்பர்கள், எனது பள்ளி என எனக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி. அடுத்ததாக உலக சாம்பியன்ஷிப் போட்டியில் கவனம் செலுத்த வேண்டும். சீனாவின் டிங் லிரன் மிகவும் திறமையானவர். அவரை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறேன். உலக சாம் பி யன் ஷிப் பில் லும் வெற்றி பெறுவேன் என்ற முழு நம்பிக்கை என்னிடம் இருக்கிறது" எனக் கூறினார்.

## குஜராத் அணியை
# கடைசி பந்தில் வீழ்த்தி டெல்லி வெற்றி

**புதுடெல்லி, ஏப். 26-**

டெல்லி கேபிடல்ஸ் மற்றும் குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதிக்கொண்ட போட்டியில், டெல்லி கேபிடல்ஸ் அணி கடைசி பந்தில் திரில் வெற்றி பெற்றது.

**குஜராத் பந்துவீச்சு...**

புதுடெல்லி அருண் ஜெட்லி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் டாஸ் வென்ற குஜராத் அணி முதலில் பந்து வீச முடிவு செய்தது. டெல்லி அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 224 ரன்கள் எடுத்தது. அந்த அணியின் கேப்டன் ரிஷப் பந்த் 43 பந்துகளில் 88 ரன்கள் எடுத்தார். அக்சர் படேல் 66 ரன்கள் எடுத்தார். குஜராத் அணியின் பந்துவீச்சாளர் சந்தீப் வாரியர் 3 விக்கெட்களை கைப்பற்றி இருந்தார்.

**225 ரன்கள் இலக்கு...**

குஜராத் அணி 225 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை விரட்டியது. அந்த அணியின் கேப்டன் ஷுப்மன் கில் எதிர்பாராத விதமாக 6 ரன்களில் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த சாய் சுதர்ஷனுடன் இணைந்து 82 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்தார் சாஹா. பின்னர் சாஹா 25 பந்துகளில் 39 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அஸ்மதுல்லா ஓமர்சாய் 1 ரன் எடுத்து ஆட்டமிழந்தார்.

**டேவிட் மில்லர்...**

சாய் சுதர்ஷன் 39 பந்துகளில் 65 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து ஷாருக்கான் மற்றும் தெவாட்டியா ஆகியோர் ஸ்வரப் ரன்களில் ஆட்டமிழந்தனர். அதிரடியாக ஆடி 23 பந்துகளில் 55 ரன்கள் எடுத்த டேவிட் மில்லர் 18-வது ஓவரில் அவுட் ஆனார். சாய் கிஷோர் 2 சிக்ஸர்கள் விளாசி 13 ரன்கள் எடுத்த நிலையில் வெளியேறினார்.

**4 ரன்களில் வெற்றி...**

குஜராத் அணியின் வெற்றிக்கு கடைசி ஓவரில் 19 ரன்கள் தேவைப்பட்டது. ஸ்ட்ரைக்கில் ரஷித் கான் இருந்தார். அந்த ஓவரை முகேஷ் குமார் வீசினார். முதல் இரண்டு பந்துகளில் பவுண்டரி விளாசினார். மூன்றாவது மற்றும் நான்காவது பந்தில் ரன் ஏதும் எடுக்கவில்லை. ஐந்தாவது பந்தில் சிக்ஸ் விளாசினார். கடைசி பந்தில் குஜராத் அணியின் ரன் எடுக்கும் முயற்சி தடுக்கப்பட்டது. 20 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 220 ரன்கள் எடுத்திருந்தது குஜராத் அணி. அதன் மூலம் 4 ரன்களில் வெற்றி பெற்றது டெல்லி கேபிடல்ஸ் அணி.

**சிறப்பான பீல்டிங்...**

இந்தப் போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸின் 19-வது ஓவரில் டெல்லி அணியின் ஸ்டப்ஸ், பவுண்டரி லைனில் அபாரமாக செயல்பட்டு ஒரு சிக்ஸரை தடுத்தார். வெறும் ஒரு ரன் மட்டுமே அந்த பந்தில் குஜராத் அணி எடுத்தது. ஸ்டப்ஸ் தடுத்த அந்த 5 ரன்கள் குஜராத் அணியின் வெற்றியை பறித்தது என்றும் அதை சொல்லலாம். டெல்லி அணி வீரர்கள் ஃபீல்டிங் பணியை சிறப்பாக செயல்பட்டனர்.

**ரிஷப் ஆட்ட நாயகன்...**

கடைசி ஓவரில் மோகித் சர்மாவுக்கு ரஷித் கான் ஸ்ட்ரைக் கொடுக்க மறுத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆட்ட நாயகன் விருதை ரிஷப் பந்த் வென்றார். இந்த போட்டியின் மூலம் புள்ளிகள் பட்டியலில் சென்னை சூப்பர் கிங்ஸ், டெல்லி கேபிடல்ஸ் மற்றும் குஜராத் டைட்டன்ஸ் அணிகள் தலா 4 வெற்றிகளுடன் முறையே 5, 6, 7 ஆகிய இடங்களில் ரன் ரேட் அடிப்படையில் உள்ளன.

## டி20 உலகக்கோப்பை தொடர்:
# பிராண்ட் அம்பாசிடராக உசைன் போல்ட் நியமனம்

**வாஷிங்டன், ஏப். 26-**

உலகின் அதிவேக மனிதர் என்று அழைக்கப்படும் ஓட்டப்பந்தய வீரர் உசைன் போல்ட் டி20 உலக கோப்பை போட்டியின் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

9வது சர்வதேச ஆண்களுக்கான டி20 உலகக் கோப்பை போட்டிகள் வருகிற ஜூன் 1ம் தேதி முதல் 29ம் தேதி வரை நடைபெற உள்ளது. அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகள் இணைந்து நடத்தும் இந்த போட்டிகளில் 20 அணிகள் பங்கேற்கின்றன. அமெரிக்காவில் முதல் முறையாக சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்பட உள்ளது. ஐசிசி சார்பில் பல்வேறு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

அமெரிக்காவில் இதற்காக சிறப்பு மைதானங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த போட்டிகளுக்கான விளம்பர தூதராக பிரபல ஓட்டப்பந்தய வீரர் உசைன் போல்ட் நியமிக்கப்பட்டுள்ளதாக ஐசிசி அறிவித்துள்ளது. ஜமைக்கா நாட்டைச் சேர்ந்த உசைன் போல்ட், உலகின் அதிவேக மனிதர் என்று அழைக்கப்படுகிறார். 2008ம் ஆண்டு முதல் 2016ம் ஆண்டு வரை நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் தொடர்ந்து மூன்று முறை பதக்கங்கள் வென்று அவர் சாதனை படைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தில் அடுத்த 4 நாட்கள் அதிக வெப்பம் பதிவாக வாய்ப்பு
## சென்னை வானிலை மையம் தகவல்

**சென்னை, ஏப். 26-**

தமிழகத்தில் வரும் ஏப்ரல் 29ம் தேதி வரை 4 நாட்களுக்கு 108 டிகிரி பாரன்ஹீட் வெப்பம் பதிவாக வாய்ப்புள்ளது என சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த சில நாட்களாகவே வெயிலின் தாக்கம் தொடர்ந்து அதிகரித்து கொண்டே இருக்கிறது. பொதுவாக கோடை காலத்தில் வெயிலின் தாக்கம் அதிகரித்துக் காணப்படும். ஆனால் இந்த ஆண்டு கோடை காலம் தொடங்குவதற்கு முன்பே வெயிலின் தாக்கம் அதிகரித்து உள்ளது. இந்நிலையில் வெயிலின் தாக்கத்திலிருந்து பொதுமக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை பல அறிவுரைகளை வழங்கி வருகிறது. மேலும் கடந்த சில நாட்களாகவே பல இடங்களில் வெயில் சதமடித்து வருகிறது.

இந்நிலையில் சென்னை வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழக பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்குகளில், காற்றின் திசை மாறுபடும் பகுதி நிலவுகிறது. கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய 2 மாவட்டங்கள், தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் ஏப்ரல் 28ம் தேதி வரை லேசான மழை பெய்யக்கூடும். தமிழகத்தில் வரும் ஏப்ரல் 29ம் தேதி வரை 5 நாட்களுக்கு 108 டிகிரி பாரன்ஹீட் வெப்பம் பதிவாக வாய்ப்புள்ளது. சென்னையில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 37 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 27 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

முன்னதாக தமிழ்நாட்டில் நேற்று 14 இடங்களில் 100 டிகிரி ஃபாரன்ஹீட்டை தாண்டி வெப்பம் பதிவாகி உள்ளது. அந்த வகையில் தமிழ்நாட்டின் 14 இடங்களில் வெயில் சதமடித்துள்ளது. இதில், அதிகபட்சமாக ஈரோட்டில் 107.6 டிகிரி பாரான்ஹீட் வெப்பமானது பதிவாகி உள்ளது. அதேபோல் சென்னை மீனம்பாக்கம் 101.66 டிகிரி பாரான்ஹீட், கோயம்பத்தூர் 101.84 டிகிரி பாரான்ஹீட், தர்மபுரி 105.26 டிகிரி பாரான்ஹீட், கரூர் பரமத்தி 105.8 டிகிரி பாரான்ஹீட், மதுரை நகரம் 101.12 டிகிரி பாரான்ஹீட், மதுரை விமான நிலையம் 103.28 டிகிரி பாரான்ஹீட், பாளையங்கோட்டை 100.58 டிகிரி பாரான்ஹீட், சேலம் 105.98 டிகிரி பாரான்ஹீட், தஞ்சாவூர் 102.2 டிகிரி பாரான்ஹீட், திருப்பத்தூர் 106.52 டிகிரி பாரான்ஹீட், திருச்சிராப்பள்ளி 104.9 டிகிரி பாரான்ஹீட், திருத்தணி 105.08 டிகிரி பாரான்ஹீட், வேலூர் 106.88 டிகிரி பாரான்ஹீட் என வெப்பமானது பதிவாகி உள்ளது.

## டிக்கெட் விற்பனை தொடக்கம்

2024-ம் ஆண்டின் ஐபிஎல் தொடர் கடந்த மார்ச் 22 ஆம் தேதி சென்னை சேப்பாக்கதில் தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் நேற்றைய டெல்லி – குஜராத் அணிக்கு இடையேயான போட்டியுடன் 40 லீக் போட்டிகள் முடிவடைந்துள்ளது. ஐபிஎல் தொடரில் கடந்த 3 நாட்களுக்கு முன் நடைபெற்ற ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணிகள் மோதின. இந்த போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்றது. முதலில் பேட்டிங் செய்த சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 210 ரன்கள் குவித்தது.

பின்னர் களமிறங்கிய லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணி 19.3 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 213 ரன்கள் எடுத்து சிஎஸ்கே அணியை வென்றது. இதனால் புள்ளிகள் பட்டியலில் 4-வது இடத்துக்கு லக்னோ அணி முன்னேறியது. சென்னை சூப்பர் கிங்ஸ் 5-வது இடத்திற்கு தள்ளப்பட்டது. இதனைத்தொடர்ந்து சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் வரும் ஏப். 28-ம் தேதி சென்னை மற்றும் ஐதராபாத் அணிகள் மோதவுள்ளன. இந்த போட்டிக்கான ஆன்லைன் டிக்கெட் விற்பனை, வரும் 25-ம் தேதி தொடங்கும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, நேற்று காலை 10:40 மணிக்கு இணையதளத்தில் சிஎஸ்கே – எஸ் ஆர்ஹைச் அணிகளுக்கு இடையேயான போட்டிக்கான டிக்கெட் முன்பதிவு தொடங்கியது.

## கிரிக்கெட் வீரரை தாக்கிய சிறுத்தை

ஜிம்பாப்வே கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் 'கய் விட்டல்' ஹூமானி பகுதியில் தான் பராமரித்து வரும் இயற்கைப் பாதுகாப்புப் பகுதியில் மலையேற்றத்தில் ஈடுபட்டிருந்த போது திடீரென சிறுத்தையால் தாக்கப்பட்டார். ஆனால், அவரது வளர்ப்பு நாய் 'சிகாரா'வினால் காயங்களுடன் உயிர் தப்பினார் கய் விட்டால். நாயும் சிறுத்தையிடம் கடிபட்டது. கய் விட்டல் ஜிம்பாப்வே அணியின் முன்னாள் ஆல் ரவுண்டர். இவருக்கு இப்போது வயது 51. 1993-ம் ஆண்டு முதல் 2003-ம் ஆண்டு வரை ஜிம்பாப்வே அணியின் முக்கிய வீரராகத் திகழ்ந்தார். இவர் 46 டெஸ்ட் போட்டிகளில் 2,207 ரன்களை எடுத்ததோடு 51 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார்.

இவரது அதிகபட்ச ஸ்கோர் 203 நாட் அவுட். 147 ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் ஆடிய கய் விட்டல் 2,705 ரன்களை 11 அரைசதங்களுடன் எடுத்துள்ளார். இதற்கிடையே, இந்தச் சம்பவம் தொடர்பாக கய் விட்டலின் படங்களை வெளியிட்டு அவரது மனைவி ஹன்னா ஸ்டூக்ஸ் பதிவு ஒன்றையும் வெளியிட்டுள்ளார். அதில், கய் விட்டல் தலை முழுவதும் காயம் ஏற்பட்டு பேண்டேஜுடன் காணப்பட்டார். சிறுத்தை தாக்கியதையடுத்து இவருக்கு ஹராரே மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நடைபெற்றது என்று தெரிவித்துள்ளார்.

## நடிகை தமன்னாவுக்கு சம்மன்

கடந்த 2023 ஆம் ஆண்டு ஐபிஎல் போட்டிகள் சட்ட விரோதமாக ஃபேர்ப்ளே செயலியில் ஒளிபரப்பு செய்யப்பட்டதால், ஐபிஎல் தொடரின் ஒளிபரப்பு உரிமையை பெற்ற தங்கள் நிறுவனத்துக்கு கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதாக வியாகாம் நிறுவனம் சைபர் கிரைமில் புகாரளித்தது. இதுதொடர்பாக ஃபேர்ப்ளே செயலியை விளம்பரப்படுத்திய பிரபலங்கள் விசாரணை வளையத்தில் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

அந்த வகையில் கடந்த ஏப்ரல் 23 ஆம் தேதி விசாரணைக்கு ஆஜராகுமாறு நடிகர் சஞ்சய் தத்துக்கு மகாராஷ்டிரா சைபர் கிரைம் போலீசார் சம்மன் அனுப்பினர். ஆனால் அவர் அந்த நாளில் தான் இந்தியாவில் இல்லை என்றும், அதற்கு பதிலாக தனது பதிலை பதிவு செய்ய மற்றொரு தேதியை ஒதுக்குமாறு கேட்டுக் கொண்டார். இந்நிலையில் ஏப்ரல் 29 ஆம் தேதி நடிகை தமன்னா பாட்டியாவை விசாரணைக்கு நேரில் ஆஜராகுமாறு மகாராஷ்டிரா சைபர் கிரைம் போலீஸ் சம்மன் அனுப்பியுள்ளது.

## காயமடைந்த கேமராமேன்

ஐ.பி.எல். தொடரில் நடைபெற்ற ஆட்டத்தில் ரிஷப் பண்ட் தலைமையிலான டெல்லி கேப்பிடல்சும், சுப்மன் கில் தலைமையிலான குஜராத் டைட்டன்சும் மோதின. இந்த ஆட்டத்தில் ரிஷப் பண்ட் அடித்த 8 சிக்சர்களில் ஒரு சிக்சர் போட்டியை படம் பிடித்துக் கொண்டிருந்த "தேபாசிஷ்" எனும் பெயரை கொண்ட கேமராமேன் மேலே பட்டு காயத்தை ஏற்படுத்தியது.

அதற்காக போட்டியின் முடிவில் ரிஷப் பண்ட் மனதார மன்னிப்பு கேட்டார். தேபாசிஷ் பாய். வேண்டுமென்றே உங்களை அடிக்கவில்லை. ஆனால் நீங்கள் விரைவாக குணமடைவீர்கள் என்று நினைக்கிறேன். அதற்காக குட் லக்" என்று கூறியுள்ளார். இந்த வீடியோ தற்போது ரசிகர்களிடையே நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## அதிகரிக்கும் கோடை வெப்பம்:
# எச்சரிக்கையாக இருக்க பொதுமக்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்

**சென்னை, ஏப். 26-**

தமிழகத்தில் அதிகரிக்கும் கோடை வெப்ப காலத்தை விவேகமான செயற்பாடுகளால் வெல்வோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

வெப்ப நிலை அதிகரிக்கும், வெப்ப அலை வீசும், என்பது போன்ற செய்திகள் தினந்தோறும் வெளிவந்து கொண்டு இருக்கிறது. இதனை உணர்த்தும் வகையில் கோடை வெப்பம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. 'அடுத்த 5 நாட்களுக்கு வடதமிழ்நாட்டின் உள் மாவட்டங்களில் அதிக வெப்பமும் வெப்ப அலையும் ஏற்படக்கூடும்' என்று இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. இத்தகைய சூழலில் பொதுமக்கள் கவனத்துடனும் மிகுந்த எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக கோடை காலம் என்பது வெப்பம் அதிகம் உள்ள மாதங்களாக இருந்தாலும், நாளுக்கு நாள் வெப்ப அளவு அதிகமாகி வருகிறது. இதில் இருந்து மக்களை பாதுகாக்க வேண்டியது அரசின் கடமை ஆகும். அதனால்தான் தலைமைச் செயலகத்தில் அரசுத் துறை அதிகாரிகளுடன் இது தொடர்பாக விரிவான ஆலோசனை நடத்தினேன். இந்திய வானிலை ஆய்வு மைய அதிகாரிகள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், மருத்துவர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் ஆகியோரின் ஆலோசனையை அரசு அதிகாரிகள் கேட்டுத் தெரிந்து கொண்ட தன் அடிப்படையில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த அறிக்கையை வெளியிடுவது மிக மிக அவசியமானதாகக் கருதுகிறேன்.

வெப்பநிலை அதிகமாகும் காலங்களில் குழந்தைகள், பள்ளி மாணவ, மாணவிகள், வயதானவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், உடல்நலக் குறைபாடுகள் உடையவர்கள் அதிகமாகப் பாதிக்கப்படலாம் இவர்களை மிகக் கவனமாக பாதுக்காக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கோடை வெயிலினால் அதிக வியர்வை வெளியேறும்போது, உடலில் உப்புச்சத்து மற்றும் நீர்ச்சத்து பற்றாக்குறை ஏற்படுகிறது. இதனால் அதிக தாகம், தலைவலி, உடல் சோர்வு, தலைசுற்றல், தசைப்பிடிப்பு, மயக்கம் மற்றும் வலிப்பு போன்ற அறிகுறிகள் ஏற்படலாம் என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள்.

பணிநேரங்களில் அடிக்கடி தண்ணீர் குடிக்க வேண்டும். தாகம் இல்லை என்றாலும், போதிய அளவு நீரை தொடர்ந்து பருகவேண்டும். அதிக அளவில் மோர், அரிசிக்கஞ்சி, இளநீர், எலுமிச்சைபழச்சாறு போன்றவற்றை பருகவேண்டும். உணவுப் பழக்க வழக்கங்களில் மாறுதல்களைச் செய்து கொள்ள வேண்டும். நீர்ச்சத்து காய்கறிகளைச் சாப்பிட வேண்டும். பழச்சாறுகளை அதிகமாக உட்கொள்ள வேண்டும். வெளியே செல்லும்போதும், திறந்த வெளியில் வேலை செய்யும் போதும் தலையில் பருத்தித் துணி,துண்டு,தொப்பி அணிந்துகொள்ள வேண்டும். பயணத்தின்போது குடிநீர் எடுத்துச் செல்லவேண்டும். தேவையில்லாமல் வெயிலில் வெளியே செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

வியர்வை எளிதாக வெளியேறும் வகையில் மிருதுவான, தளர்ந்த, காற்றோட்டமான பருத்தி ஆடைகளை அணிவது நல்லது. வயது முதிர்ந்தவர்கள் நடந்து செல்லும் போது களைப்பாக இருந்தால் நிழலில் சற்று ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும். வெப்பம் அதிகமாக உள்ள திறந்த வெளியில் வேலை செய்யும்போது, களைப்பு, தலைவலி, தலைசுற்றல் போன்ற அறிகுறிகள் ஒருவருக்கு ஏற்பட்டால், உடனடியாக நிழலுக்குச் செல்ல வேண்டும்.

மேலும், தண்ணீர், எலுமிச்சைப் பழச்சாறு, ஓ.ஆர்.எஸ். பருக வேண்டும். மயக்கம், உடல் சோர்வு, அதிக அளவு தாகம், தலைவலி, கால், மணிக்கட்டு அல்லது அடிவயிற்றில் வலி ஏற்பட்டால் அருகிலுள்ள நபரை உதவிக்கு அழைக்கவும். மிகவும் சோர்வாகவோ, மயக்கமாகவோ இருந்தால் மருத்துவ உதவியை நாடவேண்டும். சிறுபிரச்சினை என்றாலும் அதனை சாதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று அனைத்து பொதுமக்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

அதிகரித்துவரும் கோடை வெப்பத்தை எதிர்கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடுகள் மூலமாகவும், அரசால் தெரிவிக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்றுவதன் மூலமாகவும், பொதுமக்கள் திறந்த இடங்களில் பணிபுரிவோர், நீண்டதூரம் சாலை பயணங்களை மேற்கொள்வோர் பாதுகாப்பாக இருக்குமாறும் கேட்டுக் கொள்கிறேன். அரசு அதிகாரிகள், அலுவலர்கள் அனைவரும் மக்கள் பாதுகாப்பில் முழு அக்கறை செலுத்தி பாதுகாப்பை உறுதி செய்யுமாறும் கேட்டுக் கொள்கிறேன். வெப்ப அலை காலத்தை விவேகமான செயற்பாடுகளால் வெல்வோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே பழனிசாமியை சென்னை, பசுமைவழிச் சாலையில் உள்ள செவ்வந்தி இல்லத்தில் அ.தி.மு.க. மகளிர் அணி துணைச் செயலாளர் காயத்திரி ரகுராம் தனது பிறந்த நாளை முன்னிட்டு நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

# தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம்: சென்னை ஐகோர்ட் முக்கிய உத்தரவு

**சென்னை, ஏப். 26-**

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக ஜூன் 7-ம் தேதிக்குள் பதில் மனு தாக்கல் செய்ய சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக கடந்த 2018-ம் ஆண்டு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது போலீசார் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இது தொடர்பாக தேசிய மனித உரிமை ஆணையம் தாமாக முன்வந்து வழக்காக எடுத்து விசாரணை நடத்தியது. பின்னர் அதன் புலனாய்வு பிரிவு சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் அந்த வழக்கு முடித்து வைக்கப்பட்டது.

இதை எதிர்த்து மதுரையை சேர்ந்த வழக்கறிஞரும், மனித உரிமை ஆர்வலருமான ஹென்றி திபேன் சென்னை ஐகோர்ட்டில் மனு ஒன்றை தாக்கல் செய்தார். அதில் தனது புகாரின் அடிப்படையில் இந்த வழக்கை மீண்டும் விசாரிக்க தேசிய மனித உரிமைகள் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என கோரியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர் மற்றும் நீதிபதி என்.செந்தில்குமார் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது ஹன்றி திபேன் ஆஜராகி, அதிகாரிகளுக்கு எதிராக மேற்கொண்ட துறை ரீதியான நடவடிக்கை குறித்த விவரங்கள் அடங்கிய அறிக்கையை தாக்கல் செய்ய அரசு தரப்புக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனாலும், அந்த அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என வாதிட்டார்.

அப்போது அரசுத் தரப்பில், வழக்கில் எதிர்மனுதாரர்களாகச் சேர்க்கப்பட்ட சில அதிகாரிகளுக்கு நீதிமன்ற நோட்டீஸ் சென்றடையவில்லை என தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து எதிர் மனுதாரர்களாக சேர்க்கப்பட்ட அதிகாரிகள் அனைவரும் ஜூன் 7-ம் தேதிக்குள் பதில்மனு தாக்கல் செய்ய நீதிபதிகள் உத்தரவிட்டு, விசாரணையை ஜூன் 18-ம் தேதிக்கு தள்ளிவைத்தனர்.

# செந்தில்பாலாஜி மனு மீது 30-ம் தேதி தீர்ப்பு


**சென்னை, ஏப். 26-**

அமலாக்கத்துறை வழக்கில் இருந்து விடுவிக்கக் கோரி செந்தில்பாலாஜி தாக்கல் செய்த மனு மீது 30-ம் தேதி தீர்ப்பு அளிக்கப்படுகிறது.

சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச் சட்டத்தின் கீழ் அமலாக்கத்துறை பதிவு செய்த வழக்கில் இருந்து தன்னை விடுவிக்கக்கோரி முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கில் வாதங்கள் நிறைவடைந்து தீர்ப்புக்காக தள்ளி வைக்கப்பட்டது. இந்த வழக்கில் தாங்கள் கோரிய வங்கி தொடர்பான ஆவணங்கள் இன்னும் கிடைக்கவில்லை என்பதால் இந்த வழக்கில் தங்களது தரப்பில் மீண்டும் வாதிட அனுமதிக்க வேண்டும் எனக்கோரி செந்தில்பாலாஜி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த நிலையில், இந்த மனு சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி அல்லி முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. இருதரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில், மனு மீதான தீர்ப்பை வரும் ஏப்ரல் 30-ம் தேதிக்கு ஒத்திவைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

முன்னதாக நேற்றுடன் செந்தில் பாலாஜியின் நீதிமன்றக் காவல் முடிவடைந்ததை அடுத்து அவரது நீதிமன்றக் காவலை வரும் 30-ம் தேதி வரை நீட்டித்து நீதிபதி அல்லி உத்தரவிட்டார்.



மதுரை சித்திரை திருவிழாவை முன்னிட்டு நேற்று முன்தினம் இரவு ராமராயர் மண்டகப்படியில் கள்ளழகருக்கு நடந்த தசாவதார நிகழ்ச்சியில் முத்தங்கி சேவை, மச்ச அவதாரம், கூர்ம அவதாரம், வாமன அவதாரம், ராம அவதாரம், கிருஷ்ண அவதாரம், மோகினி அவதாரம் உள்ளிட்ட அவதாரங்களில் கள்ளழகர் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சி அளித்தார்.

# காங்கிரஸ் தேர்தல் அறிக்கை குறித்து நேரில் விளக்கத்தயார்

## பிரதமர் மோடிக்கு கார்கே கடிதம்

புதுடில்லி, ஏப். 26-

காங்கிரஸ் தேர்தல் அறிக்கையை நேரில் விளக்கத் தயார் எனக் கூறி பிரதமர் மோடிக்கு காங்கிரஸ் தலைவர் கார்கே கடிதம் எழுதியுள்ளார்.

கடிதத்தில் கார்கே கூறியிருப்பதாவது: காங்கிரஸ் தேர்தல் அறிக்கையை நேரில் விளக்கத் தயாராக உள்ளேன். தன்னை சந்திக்க நேரம் ஒதுக்க வேண்டும். காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில், பெண்கள், இளைஞர்கள் மற்றும் விவசாயிகள் பலன் பெறும் வகையில் பல்வேறு திட்டங்கள் உள்ளன. காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடாத அம்சங்களை பிரதமரின் ஆலோசகர்கள் அவருக்கு கூறியுள்ளனர்.

பிரதமர் என்ற முறையில் பொய்யான அறிக்கைகளை வெளியிடக்கூடாது என்பதற்காகவே நேரில் சந்தித்து விளக்கம் தர விரும்புகிறேன். மணிப்பூரில் பெண்களுக்கு எதிராக நடந்த வன்கொடுமைகளுக்கு உங்கள் அரசு பொறுப்பு கிடையாதா?. உங்கள் ஆட்சியில் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டபோது, அவர்களின் மனைவி மற்றும் குழந்தைகளுக்கு நீங்கள் செய்தது என்ன?. இவ்வாறு கடிதத்தில் கார்கே கூறியுள்ளார்.

### உ.பி. கண்ணூஜ் தொகுதியில்

# சமாஜ்வாடி கட்சியின் தலைவர் அகிலேஷ் வேட்புமனு தாக்கல்

லக்னோ, ஏப். 26-

சமாஜ்வாடி கட்சி சார்பில் உத்தரபிரதேச மாநிலம் கண்ணூஜ் தொகுதியில் போட்டியிடும் அக்கட்சியின் தலைவர் அகிலேஷ் யாதவ் நேற்று தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

உத்தரபிரதேச மாநிலத்தில் உள்ள 80 தொகுதிகளுக்கும் 7 கட்டமாக பாராளுமன்ற தேர்தல் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் உத்தரபிரதேச மாநிலம் கண்ணூஜ் தொகுதி உள்பட 10 தொகுதிகளுக்கு மே 13-ம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இந்த தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் கடந்த 18-ம் தேதி தொடங்கி நேற்றுடன் முடிவடைந்தது. இந்நிலையில், சமாஜ்வாடி கட்சி சார்பில் கண்ணூஜ் தொகுதியில் போட்டியிடும் அக்கட்சியின் தலைவர் அகிலேஷ் யாதவ் நேற்று வேட்புமனு தாக்கல் செய்தார். ராம் கோபால் யாதவ் உள்ளிட்ட கட்சி தலைவர்கள் முன்னிலையில் அகிலேஷ் யாதவ் வேட்புமனு தாக்கல் செய்தார்.

இதற்கு முன்னதாக கண்ணூஜ் தொகுதியில் தேஜ் பிரதாப் யாதவ் போட்டியிடுவார் என சமாஜ்வாடி கட்சி அறிவித்திருந்தது. ஆனால் தற்போது அந்த தொகுதியில் அகிலேஷ் யாதவ் போட்டியிடுகிறார்.

2000, 2004, 2009 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தலில் கண்ணூஜ் தொகுதியில் இருந்து அகிலேஷ் தொடர்ச்சியாக வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. உத்தரபிரதேச மாநிலத்தில் சமாஜ்வாடி கட்சியும் காங்கிரஸ் கட்சியும் கூட்டணி அமைத்து போட்டியிடுகின்றன. அங்கு உள்ள 80 இடங்களில் 17 இடங்களில காங்கிரஸ் போட்டியிடுகிறது, மீதமுள்ள 63 இடங்களில் சமாஜ்வாடி கட்சியும் அதன் சிறிய கூட்டணிக் கட்சிகளும் போட்டியிடுகின்றன.

# புதுச்சேரி இளைஞர் உயிரிழப்பில் குழு அமைத்து விசாரிக்கப்படும்

## அமைச்சர் சுப்பிரமணியன் உறுதி

சென்னை, ஏப். 26-

உடல் பருமன் சிகிச்சையால் இளைஞர் உயிரிழந்தது தொடர்பாக இளைஞரின் உறவினர்களிடம் தொலைபேசி வழியாக சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆறுதல் தெரிவித்ததுடன், குழு அமைத்து விசாரணை நடத்தப்படும் என உறுதியளித்தார்.

புதுச்சேரி மாநிலம் முத்தியால்பேட்டை டி.வி.நகரை சேர்ந்தவர் செல்வநாதன். இவர் மார்க்கெட் கமிட்டி ஊழியராக பணியாற்றி வருகிறார். இவருக்கு ஹேமச்சந்திரன், ஹேமராஜன் என இரண்டு மகன்கள். 26 வயதான இருவரும் இரட்டையர்கள். இதில் ஹேமச்சந்திரன் பி.எஸ்சி., முடித்துவிட்டு டிசைனிங் பணியில் இருந்தார். ஹேமராஜன் சித்தா பார்மசிஸ்ட்டாக உள்ளார்.

ஹேமச்சந்திரனுக்கு உடல் எடை பிரச்னை இருந்து வந்துள்ளது. இவரது சுமார் 150 கிலோவுக்கும் மேல் இருந்ததால் சென்னை பம்மலில் உள்ள தனியார் மருத்துவமனையில் மருத்துவ ஆலோசனை பெற்று வந்தார். அங்கு அவருக்கு அறுவை சிகிச்சை மூலம் கொழுப்பு நீக்க சிகிச்சை மேற்கொள்ள முடிவு எடுக்கப்பட்டது. இதற்காக கடந்த 22-ம் தேதி அவர் அந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஆனால், அறுவை சிகிச்சை தொடங்கிய 15 நிமிடங்களிலேயே அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்து விட்டதாக மருத்துவமனை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து அவரது உடல அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதனிடையே ஹேமச்சந்திரனின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக கூறி அவரது குடும்பத்தினர் புதுச்சேரி சங்கர் நகர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். இந்த புகாரின் பேரில் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் சம்பவம் குறித்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் உயிரிழந்த இளைஞரின் உறவினர்களிடம் விசாரித்தார்.

மேலும், இளைஞர் உயிரிழந்தது குறித்து விசாரணை நடத்த குழு அமைக்க சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிடப்படும் என தெரிவித்தார். தொலைபேசியில் தொடர்புகொண்ட அமைச்சர் மா.சுப்பிரமணியன் இளைஞரின் உறவினர்களிடம் ஆறுதல் கூறினார்.

# 13 மாநிலங்களில் இன்று.... (1-ம் பக்க தொடர்ச்சி)

அவரது சொந்த ஊரும் கூட. அதேபோல் தற்போது பாஜக வசம் உள்ள அம்ரோஹா தொகுதியில் டானிஷ் அலி காங்கிரஸ் சார்பில் களம் காண்கிறார்.

உ.பி.யின் இந்த 8 தொகுதிகளிலும் கடந்த சில நாட்களாக பாஜக சார்பில் பிரதமர் மோடி, மத்திய அமைச்சர்கள் அமித் ஷா, ராஜ்நாத் சிங், உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத், இந்தியா கூட்டணி சார்பில் அகிலேஷ் யாதவ், ராகுல் காந்தி ஆகியோரும் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டனர். பகுஜன் சமாஜ் கட்சியின் மாயாவதி, ராஷ்ட்ரீய லோக் தள கட்சியின் ஜெயந்த் சிங் ஆகியோரும் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டனர்.

கர்நாடகாவில் இன்று உடுப்பி சிக்மகளூரு, ஹசன், தக்சின கன்னடா, சித்ரதுர்கா, தும்கூர், மாண்டியா, மைசூரு, சாமராஜநகர், பெங்களூரு (ஊரகப் பகுதி), பெங்களூரு வடக்கு, பெங்களூ மத்தி, பெங்களூரு தெற்கு, சிக்பல்லபூர், கோலார் ஆகிய தொகுதிகள் தேர்தலை எதிர்கொள்கின்றன.

இவற்றில் பெங்களூரு தெற்கு மற்றும் மைசூரு முக்கிய தொகுதிகளாக அறியப்படுகின்றன. பெங்களூரு தெற்கு தொகுதியில் தேஜஸ்வி சூரியா மீண்டும் வெற்றி பெறும் முனைப்பில் களம் காண்கிறார்.

ஆனால் அவரை எதிர்த்து மாநில அமைச்சர் ராமலிங்க ரெட்டியின் மகள் சவுமியா ரெட்டி களமிறக்கப்பட்டுள்ளார். மைசூருவில் பாஜக சார்பில் மன்னர் குடும்பத்தைச் சேர்ந்த யதுவீர் வாடியார் களம் காண்கிறார். கடந்த 2019 தேர்தலில் கர்நாடகாவில் பாஜக 25 தொகுதிகளைக் கைப்பற்றியது. இந்த முறை மொத்தமுள்ள 28 தொகுதிகளில் 25-ல் பாஜக நேரடியாக போட்டியிடுகிறது. 3 தொகுதிகளில் கூட்டணிக் கட்சியான மதச்சார்பற்ற ஜனதா தளம் போட்டியிடுகிறது.

மகாராஷ்டிராவில் இன்று 8 மக்களவைத் தொகுதிகளில் தேர்தல் நடைபெறவிருக்கிறது. இதில் நான்டட், அமராவதி தொகுதிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. நான்டட் தொகுதி காங்கிரஸின் கோட்டையாக இருந்த நிலையில் அக்கட்சியில் இருந்து திடீரென பாஜகவில் இணைந்தார் அசோக் சவான்.

அத்தொகுதியில் இருமுறை வெற்றி பெற்றுள்ள அசோக் சவான் இந்த முறை பாஜகவுக்கு அதை வென்று கொடுப்பார் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

டார்ஜிலிங், ராய்கஞ்ச், பலூர்கட் மக்களவைத் தொகுதிகளில் இன்று வாக்குப்பதிவு நடைபெறுகிறது. 42 தொகுதிகளிலும் திரிணமூல் காங்கிரஸ் கட்சி தனித்தே போட்டியிடுகிறது.

பாலூர்கட் தொகுதியில் பாஜக மாநிலத் தலைவர் சுகந்த மஜும்தார் களம் காண்கிறார். சிட்டிங் எம்.பி.யான அவரை எதிர்த்து பிப்லப் மித்ராவை களமிறக்கியுள்ளது திரிணமூல் காங்கிரஸ். டார்ஜிலிங் பொருத்தவரை சிட்டிங் பாஜக எம்.பி. ராஜு பிஸ்தாவை எதிர்த்து கோபால் லாமாவை திரிணமூல் களமிறக்கியுள்ளது. கடந்த ஏப்ரல் 19-ஆம் தேதி மேற்குவங்கத்தின் கூச் பெஹார், அலிபுர்துராஸ், ஜல்பாய்குரியில் நடந்த முதல் கட்ட தேர்தலில மொத்தம் 82 சதவீதம் வாக்குப்பதிவாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.



சென்னை பசுமைவழிச்சாலையில் உள்ள செவ்வந்தி இல்லத்தில் அ.தி.மு.க. பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமியை திரைப்பட இயக்குனரும், நடிகருமான ரவிமரியா மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினார்.

# தென் தமிழகத்தில் 3 நாட்கள் லேசான மழைக்கு வாய்ப்பு

## சென்னை வானிலை மையம் தகவல்

சென்னை, ஏப். 26-

தென் தமிழகத்தில் வரும் 28-ம் தேதி வரை லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

தமிழக பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்குகளில், காற்றின் திசை மாறுபடும் பகுதி நிலவுகிறது. வரும் 28-ம் தேதி வரை தென் தமிழக கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்கள், தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

வரும் 29-ம் தேதி முதல் 01.05.2024 வரை, தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். வரும் 29-ம் தேதி வரை, தமிழக மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அதிகபட்ச வெப்ப நிலை இயல்பை விட 2ஊ-4ஊ செல்சியஸ் அதிகமாக இருக்கக்கூடும். தமிழக உள் மாவட்டங்களின் சமவெளி பகுதிகளில் ஒருசில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை 38°-41° செல்சியஸாக இருக்க கூடும்.

.வரும் 29-ம் தேதி வரை தமிழக உள் மாவட்டங்களின் சமவெளி பகுதிகளில் பிற்பகலில் காற்றின் ஈரப்பதம் 30-50 சதவீதமாகவும், மற்ற நேரங்களில் 40-75 சதவீதமாகவும் மற்றும் கடலோரப்பகுதிகளில் 50-80 சதவீதமாகவும் இருக்கக்கூடும்.

அதிக வெப்பநிலை மற்றும் அதிக ஈரப்பதம் இருக்கும் பொழுது அசவுகரியம் ஏற்படலாம். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

அதிகபட்ச வெப்பநிலை 36-37 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 26-27 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# சென்னை விமான நிலையத்தில் ரூ.35 கோடி போதைப்பொருள் பறிமுதல்

சென்னை, ஏப். 26-

சென்னை விமான நிலையத்தில் ரூ.35 கோடி மதிப்புள்ள கொக்கைன் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

சென்னை விமான நிலையத்தில் போதைப் பொருட்கள் கடத்தப்படுவதாக சுங்கத்துறை அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்துள்ளது. அதன் படி, சென்னை விமான நிலையத்தில் பயணிகளின் உடைமைகளை நேற்று (ஏப்ரல் 25) சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை செய்தனர்.

அப்போது கம்போடியா நாட்டிலிருந்து மலேசியா வழியாக சென்னை வந்த விமானத்தில், ஒரு நபரின் உடைமைகளை அதிகாரிகளை சோதனை செய்தனர். பைக்குள் மறைத்து எடுத்த வந்த ரூ.35 கோடி மதிப்புள்ள கொக்கைன் போதைப் பொருளை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். அந்த நபரிடம் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்த முன்னாள் சார்பதிவாளர்

## பறிமுதல் செய்ய நீதிமன்றம் உத்தரவு

திருச்சி, ஏப். 26-

திருச்சியில் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்த முன்னாள் சார்பதிவாளர், அவரது மனைவி ஆகியோருக்கு, சிறப்பு நீதிமன்றத்தில் ஐந்து ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. ரூ.100 கோடி மதிப்பிலான சொத்துக்களை பறிமுதல் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டம், முசிறி அருகே, பில்லாதுறை கிராமத்தைச் சேர்ந்தவர் ஜானகிராமன், 79. இவர், 1989 - 1993ம் ஆண்டு காலக்கட்டத்தில், துறையூர், உறையூர், முசிறி, அட்டுவம்பட்டடி, வில்பட்டி, கொடைக்கானல் ஆகிய இடங்களில் சார்பதிவாளராக பொறுப்பு வகித்துள்ளார். இந்த காலக்கட்டத்தில், வருமானத்திற்கு அதிகமாக சட்ட விரோதமான வகையில் அவரது பெயரிலும், அவரது மனைவி வசந்தி, 65, என்பவர் பெயரிலும் சொத்துக்கள் வாங்கியுள்ளார்.

ஜானகிராமன் பெயரிலும், அவரது மனைவி வசந்தி பெயரிலும் வில்பட்டி மற்றும் கொடைக்கானல் பகுதியில் வாங்கிய சொத்தின் தற்போதைய மதிப்பு மட்டும் ரூ.100 கோடிக்கும் மேல் இருக்கும் என்று கூறப்படுகிறது. வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக, கடந்த 2001ம் ஆண்டு ஆக.,17ல் அப்போதைய திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு இன்ஸ்பெக்டர் அம்பிகாபதி, அவர் மீது வழக்கு பதிவு செய்து விசாரித்தார்.

வழக்கின் புலன் விசாரணை முடித்து, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. நீதிமன்றத்தில் சாட்சிகள் விசாரணையில் இருந்து வந்த வழக்கின் தொடர் விசாரணையை தற்போதைய டி.எஸ்.பி., மணிகண்டன், இன்ஸ்பெக்டர் சேவியர்ராணி, எஸ்.ஐ., பாஸ்கர் மற்றும் சிறப்பு அரசு வக்கீல் சுரேஷ் குமார் ஆகியோரால் நடத்தப்பட்டது.

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் சிறப்பு நீதிமன்ற நீதிபதி கார்த்திகேயன் இந்த வழக்கை விசாரித்தார். விசாரணை முடிவில், முன்னாள் சார்பதிவாளர் ஜானகிராமன் மற்றும் அவரது மனைவி வசந்தி ஆகிய இருவருக்கும் தலா 5 ஆண்டு கடுங்காவல் தண்டனையும், தலா 10 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்தார். மேலும், வருமானத்திற்கு அதிகமாக சேர்க்கப்பட்ட ரூ.100 கோடி மதிப்பிலான சொத்துக்களை பறிமுதல் செய்து, அரசுக்கு ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார்.